விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 04 திங்கட்கிழமை (20.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## உள்ளூராட்சித் தேர்தலுக்கு டிசம்பர் 11 முதல் வேட்பு மனு!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான வேட்பு மனு டிசம்பர் 11 ஆம் திகதி முதல் கோருவதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி நண் பகல் 12 மணிவரை வேட்பு மனு ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த திகதி அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (மு-4)

## இடைக்கால அறிக்கை குறித்து நேரடி விவாதத்திற்குத் தயார்!

### சுமந்திரன் பகிரங்க சவால்

(மட்டக்களப்பு)

இடைக்கால அறிக்கையில் தமிழர்களுக்கு எதுவும் இல்லை என்று கூறுபவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் அமைச்சர்களாக இருந்தாலும் அவர்களுடன் நேரடியாக விவாதிப்பதற்கு 23



## ஆணைக்குழு முன் பிரதமர் இன்று ஆஜர்

(கொழும்பு)

முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஆஜராகவுள்ளார்.

ஆணைக்குழு விடுத்துள்ள அறிவித்தலின் படி பிரதமர் இன்று காலை 10 மணிக்கு ஆணைக்குழுவில் ஆஜராக வேண்டும். (மு-4)

## பெற்றோல் தட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

மீண்டும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படலாம் என் அச்சத்தில் நேற்று மாலை முதல் எரிபொருள் 23

## இந்திய மீனவர் 8 பேர் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட எட்டு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு படகுகளையும் இலங்கை கடற்படை வசப்படுத்தியுள்ளது.

இலங்கை கச்சத்தீவு பகுதியில நேற்று முன்தினம் இரவு 23

## வாள்வெட்டு குழுவை தேடி வேட்டை

# 2 நாட்களில் 41 பேர் கைது!

# யாழ்ப்பாணத்தில் பொலிஸார் அதிரடி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மையில் அச்சுறுத்தலாக அமைந்த வாள்வெட்டு சம்பவங்களை அடுத்து கடந்த இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் 41 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## வாள்வெட்டுக்குழுக்களை தேடி பொலிஸாரின் கண்காணிப்பு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வாள்வெட்டுக் குழுக்களைத் தேடிப் பொலிஸாரின் கண்காணிப்புப் பணிகள் நேற்றும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமையும், புதன்கிழமையும் இரவு வேளைகளில் யாழில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்களில் பலரும் படுகாயமடைந்ததுடன் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகளும் சேதமாக்கப் பட்டிருந்தன.

இதனையடுத்து வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு யாழ். மேல்நீதிமன்ற 23

## யாழ். குடாநாட்டு வெள்ளத்துக்கு தவறான வடிகாலமைப்பே காரணம்

### அனர்த்த முகாமைத்துவ நிலையம்

(கொழும்பு)

அண்மைய மழையின் போது யாழ். குடாநாட்டில் பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டமைக்கு கடல்நீரேரியின் நீர்மட்டம் அதிகரித்தமை காரணம்அல்ல என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். அண்மையில் குடாநாட்டில் பெய்த தொடர் மழையினால், பல இடங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டது.


இந்த நிலையில், யாழ். குடாநாட்டின் புவியியல் அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இன்னும் சில ஆண்டுகளில் குடாநாடு நீரில் மூழ்கி விடும் 23

## சர்வேஸின் ஆதங்கம் எனக்குள்ளும் இருந்தது

(யாழ்ப்பாணம்)

தேசியக் கொடி என்பது ஒரு நாட்டின் மக்களை அடையாளப்படுத்துகின்றது. மக்களுக்கு முரண்பாடுகள் இருக்கலாம். கட்சிகளுள் வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் அதை வைத்துத் தேசியக்கொடி பிரதிபலிக்கும் மக்களை உதாசீனப் செய்யக் கூடாது.

சர்வேஸ்வரனின் ஆதங்கம் எனக்கும் இருந்து வந்துள்ளது. றோயல் கல்லூரியின் சிரேஷ்ட போர்ப்பயிற்சிப் பள்ளி மாணவன் (Cadet) என்ற முறையில் 1959ஆம்



ஆண்டு சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டதன் பின்னர் எந்த ஒரு சுதந்திர விழாவிலும் நான் கலந்துகொள்ளவில்லை.

நீதியரசராக இருந்த போது அழைப்பிதழ் கிடைத்தும் நான் கலந்து கொள்ளவில்லை. 23

## காங்கேசன் கடலில் 55 கிலோ கேரளா கஞ்சா மீட்பு

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை கடற்பரப்பில் இருந்து 55 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர். 23

## தேசியக் கொடியை ஏற்ற மறுத்தது அரசியலமைப்பு மீறலா?

### சட்டமா அதிபரிடம் ஆளுநர் ஆலோசனை

(கொழும்பு)

தேசியக்கொடியை ஏற்ற வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் மறுப்புத் தெரிவித்தமை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரவுள்ளதாக வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். வவுனியா ஈரப்பெரியகுளத்தில் உள்ள பரகும் மகாவித்தியாலய என்ற 24

## மின்னல் தாக்கி சிறுவன் உட்பட இருவர் பலி!

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியில் மின்னல் தாக்கி சிறுவன் ஒருவன் பலியானார்.

பலியான சிறுவன் 11 வயதுடைய மன்னார் முருங்கன் செட்டியார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

குறித்த சிறுவன் நேற்று மதியம் தனது வீட்டில் இருந்து வயலுக்கு சென்று கொண்டிருந்த வேளையிலேயே இந்த சம்பவம் இடம் பெற் 23

## காய்ச்சலால் குடும்பப்பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மூன்று நாள் தொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் நேற்று 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான

## இறுதிக் கருத்தரங்கு

தரம் – 11 O/L - 2017

இடம்:

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை - யாழ்)

காலம் : 25, 26.11.2017 சனி, ஞாயிறு

| விஞ்ஞானம் | கணிதம் | வரலாறு | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் | பிரபல ஆசிரியர் |
| A.சியாமளரூபன் | K.உமாகரன் | R.S.சந்திரன் | க.மு.நித்தி | துசி |
| (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) | (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | (யா/ புனித பத்திரிசியார் கல்லூரி) | (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) |
| 25.11.2017 | 26.11.2017 | 26.11.2017 | 25.11.2017 | 25.11.2017 |
| காலை | மாலை | காலை | மாலை | மாலை |
| 8.30-11.30 | 2.30-6.00 | 8.30-12.00 | 2.30-6.00 | 12.00-2.00 |

- முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாத்தாள்கள் (விடைகளுடன்) வழங்கப்படும்.
- முழுப்பாட அலகுகளும் மீட்கப்படும்.
- மொத்தக் கட்டணம் - 400/=
- தனிப்பாட அனுமதி உண்டு (100/= ஒரு பாடம்)

(சி-448)

குறிப்பு: வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்

முற்பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 077 017 5346


# காலியில் அமைதி நிலை!

காலி மாவட்டத்தில் சில பிரதேசங்களில் நேற்று முன் தினம் மாலை 6 மணி முதல் அமுல்படுத்தப்பட்டு இருந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நேற்று அதிகாலை 6 மணிக்கு நீக்கப்பட்டது.

வெலிப்பிட்டி, மோதர, மஹாஅபுகல, ருக்வத்த, ஜின் தோட்ட கிழக்கு மற்றும் மேற்கு பியதிகம குருந்துவத்த ஆகிய பிரதேசங்களில் இருந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்த பிரதேசங்களில் அமைதி நிலைமை நிலவுகின்றது. இதேவேளை பிரதேச பாதுகாப்பில் பொலிஸார் மற்றும் கடற்படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காலி மாவட்டத்தில் கடந்த 17 ஆம் திகதி ஏற்பட்ட அமைதியற்ற நிலையை அடுத்து இந்த பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(மு-4)

# ஈழத்து இசையமைப்பாளர் ரீ.பத்மநாதன் காலமானார்



ஈழத்து இசையமைப்பாளர் திருமலை ரீ.பத்மநாதன் காலமானார். ஈழத்தின் திருகோணமலையைச் சேர்ந்த ரீ.பத்மநாதன் இலங்கை வானொலி மெல்லிசைப் பாடல்கள் மூலம் கவனத்தை ஈர்த்தவர்.

1964ஆம் ஆண்டில் திருகோணமலை இசைக் கழகம் என்ற இசைக்குழுவை நிறுவிய இவர் ஈழக் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் தயாரித்து நடித்த நிர்மலா திரைப்படத்துக்கு இசை அமைத்துள்ளார்.

திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த சில்லையூர் செல்வராசான் எழுதிய "கண்மணி ஆடவா .." என்ற பாடல் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் பாராட்டைப் பெற்றது.

இதேவேளை தென்றலும் புயலும் என்ற ஈழத்துத் திரைப்படத்துக்கும் இவர் இசையமைத்துள்ளார். கர்நாடக, மேலைத்தேச இசை ஞானம் உடைய இவரது பாடல்கள் ஈழ மண்வாசம் கொண்டவையாக மதிக்கப்படுகின்றது. (மு-4)

# மரண அறிவித்தல்

## அருணகிரிநாதன் செல்வநாதன்



யாழ். பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணகிரிநாதன் செல்வநாதன் நேற்று முன் தினம் (18.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாசனி அவர்களின் கணவரும், அருணன், ரமணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அருணகிரிநாதன் - மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வரும், செல்லப்பா - காலஞ்சென்ற கனேகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், புனிதவதி, குமரநாதன், தேவநாதன், சித்திரா, கோபிநாதன் ஆகியோரின் சகோதரரும், சிவானந்தன், சாந்தினி, தில்லைநாதன், வில்லியம், உஷாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2017) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம். (1401)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 0212221394


## பணியாளர் தேவை

பிரபல்யமான உணவு விடுதி, உல்லாசப் பயணிகள் விடுதிகளுக்கு பணியாளர்கள் தேவை.

I. காசாளர்
(மூன்று மொழிகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

II. சிட்டை எழுதுநர்
(மூன்று மொழிகள் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

III. சமையலாளர்

IV. பரிமாறுநர்
(மூன்று மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது)

. தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது, தங்குமிடவசதியும் தகுந்த சம்பளமும் கொடுக்கப்படும்.

■19, 20, 21/11/2017 ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நேரில் சமுகம் தரவும்.

0212225876, இராமநாதன் வீதி,
0776016310 (சி-442) யாழ்ப்பாணம்.



## யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

### சாதனை மாணவர்கள்



சோ.விதுசன்
8A,B
சமூக விஞ்ஞானப் போட்டி 2016 தேசியமட்டம் 1-ம் இடம்



க.சுஜீவன்
A,3B,3C,2S



க.நிருத்திகா
4A,B,4C



பா.தினேஷா
5A,2C,2S



க.சுஜீவா
A,B,3C,3S



கே.மதுமிலன்
சமூக விஞ்ஞானப் போட்டி 2016 தேசியமட்டம் 4-ம் இடம்



க.ஜனோபா
இலங்கை மின்சாரசபையால் நடத்தப்பட்ட புத்தாக்கப் போட்டி - 2017 தேசியமட்ட வெற்றியாளர்

சாதனைக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.


Best Wishes

(சி-446)

வாழ்த்துவோர்:
பழைய மாணவர் சங்கம்,
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

# உரிமைகளைப் பெறாவிடின் தமிழினம் விரைவில் இலங்கையில் மறைந்து போகப்போவது திண்ணம்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் எச்சரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**தமிழர்கள் பிரச்சினை எங்கு தொடங்கியது, எப்போது தொடங்கியது, ஏன் தொடங்கியது, எவ்வாறான ஒரு பாதையில் இதுவரை பயணித்துள்ளது என்பவற்றைப் பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்குத் தரப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். அந்த அடிப்படையில் சிந்தித்ததில் சில அடிப்படை உரிமைகளை நாங்கள் பெறாவிட்டால் எமது இனம் விரைவில் இலங்கையில் மறைந்து போகப் போவது திண்ணம் என்ற எண்ணம் என்னிடம் மேலோங்கியுள்ளது. ஆகவே நான் எதைச் சரியென்று அடையாளம் காண்கின்றேனோ அதனைக் கூறிவருகின்றேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்குக் கிடைக்கும் கேள்விகளில் ஒன்றிற்கு வாராவாரம் பதிலளித்து வருகின்றார். இவ் வாரத்தைய கேள்வி : தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் படாதபாடுபடுகையில் அண்மையில் அரசியலுக்கு வந்த நீங்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதைப் பலரும் விமர்சனஞ் செய்கின்றார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து போகாமல் அவர்களின் செயற்பாடுகளுக்கு முரண்பாடாக நடப்பது எதற்காக?

பதில் - ஒன்றை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். விக்னேஸ்வரனுக்கு ஏற்கனவே பெயர், புகழ், பணம், கல்வி, அந்தஸ்து, நல்ல மனைவி பிள்ளை கள், பேரப்பிள்ளைகள் என்று எல்லாவற்றையுந் தந்து வைத்து விட்டான் இறைவன். கேவலம் ஒரு கட்சியை ஏற்படுத்தி அதில் தலைமைப் பதவி வகிக்கவோ, ஒரு மத்திய அரசின் அமைச்சர் பதவி பெறவோ விக்னேஸ்வரனுக்குத் தேவையில்லை. அவற்றில் அவனுக்கு நாட்டமும் இல்லை. வேண்டாவெறுப்பாக அரசியலுக்கு வந்தவன் அவன். தலைமைத்துவத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதில் அவனுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. இறைவன் அருளாலும் குருவின் ஆசியாலும் அண்மைக் காலங்களில் அவன் மனதில் குரோதம், பொறாமை, கோபம் போன்ற குணங்கள் தங்கியிருக்க மறுத்துவிட்டன.

எதிரிகளையுஞ் சேர்த்து எல்லோர் மீதும் உண்மையான அன்பு பாராட்டக்கூடிய ஒரு நிலையை இறைவன் அவனுக்கு அளித்துள்ளான். முன்னைய பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், பாராளுமன்ற அங்கத்தவர் சுமந்திரன், சட்டத்தரணி புவிதரன் போன்றவர்கள் தனது மாணாக்களாவார்கள் என்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டவன். தன்சகோதரர்கள்போலவே அவர்களை அன்புடன் நோக்குகின்றான். ஆகவே எவரையும் பகைமைபாராட்ட வேண்டிய அவசியம் அவனுக்கில்லை.

பின் எதற்காக விக்னேஸ்வரன் கருத்துக்கள் முரண்பாடாக அமைந்துள்ளன என்று கேட்டால் ஒரு விடயத்தை பரிசீலித்துப்பார்க்கும் போது அதனை ஆதியோடந்தமாக ஒரு சரித்திர ரீதியாகப் பார்க்கும் ஒரு பாங்கை அவனுக்கு இறைவன் கொடுத்துள்ளான். நீதியரசராக இருந்தபோது அந்தப்பாங்கானது உறுதுணையாக அமைந்தது.

இப்பொழும் அப்படித்தான். தமிழர்கள் பிரச்சினை எங்கு தொடங்கியது, எப்போது தொடங்கியது, ஏன் தொடங்கியது, எவ்வாறான ஒரு பாதையில் இதுவரை பயணித்துள்ளது என்பவற்றைப் பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவனுக்குத் தரப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். அந்த அடிப்படையில் சிந்தித்ததில் சில அடிப்படை உரிமைகளை நாங்கள் பெறாவிட்டால் எமது இனம் விரைவில் இலங்கையில் மறைந்து போகப்போவது திண்ணம் என்ற எண்ணம் என்னிடம் மேலோங்கியுள்ளது. ஆகவே நான் எதைச்சரியென்று அடையாளம் காண்கின்றேனோ அதனைக்கூறிவருகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை இக்கட்டினுள் இட்டுச் செல்லும் எண்ணம் எனக்கு இம்மியளவும் கிடையாது. அவர்கள் எடுக்கும் பாதை பிழையான சேரிடத்திற்கு செல்லப் போகின்றது என்பதை அறிந்தும் அதனைத் தடுக்காது விட்டால் எம் யாவரினதும் பவனி எமக்கு அழிவையே நல்கும். பாதையைச்சீர்செய்து பவனியுங்கள் என்று மட்டுமே நான் கூறிவருகின்றேன்.

பலர் என்னைப்போன்றே அதனைக் காண்கின்றார்கள். ஆனால்சிலர்தாம்போகும் பாதையே சரி என்று பயனற்ற பாதையில் பயணஞ் செய்யப் பார்க்கின்றார்கள். இது தான் முரண்பாட்டின் காரணம். முரண்பாட்டிற்கு நான் காரணமல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஐக்கிய அரபு வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் H.H. Sheikh Abdullah bin Zayed Al Nahyan ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்தார்.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையிலான தொடர்புகளில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சி குறித்து ஜனாதிபதி இதன்போது மகிழ்ச்சி தெரிவித்தார்.

இரு நாட்டு உறவுகளுக்கும் பாரிய சக்தியாக விளங்கும் ஐக்கிய அரபு தேசத்தில் வசிக்கும் 125,000 இலங்கைத் தொழிலாளர்களின் பங்களிப்பு தமது பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிப்பதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இதன்போது தெரிவித்ததையடுத்து அவர்களது அந்த பங்களிப்பு எமது நாட்டிற்கும் அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றுகின்றதென ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளிற்கு இடையிலான பொருளாதார உறவுகளையும் முதலீடுகளையும் மேம்படுத்துதல் தொடர்பாகவும் சுற்றாடல், ஹோட்டல் வர்த்தகத்துறை, நிதி நிறுவனங்கள் முதலியவற்றுக்கான வாய்ப்புகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

டுபாய் நகரத்திலிருந்து கிழக்கு திசையில் அமைந்துள்ள மிகவும் பலமானதொரு நிதி மையமாக கொழும்பு நகரத்தினை மாற்றியமைப்பதற்கான செயற்பாடுகள் தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படுவதாகவும் அதன் பொருட்டு பிரதான நிதியியல் கேந்திர நிலையமாக விளங்கும் டுபாய் நகரிலிருந்து அதிகளவான ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம ஆகியோரும் இரு நாடுகளினதும் தூதுவர்கள் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

## ஜிந்தோட்டை சம்பவத்தில் எவரும் உயிரிழக்கவில்லை

(காலி)

காலி, ஜிந்தோட்டை சம்பவத்தில் எவரும் உயிரிழக்கவில்லை என அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அரசாங்கத்தினால் நட்டஈடு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜிந்தோட்டை சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிர்ச்சேதங்கள் இடம்பெற்றதாக செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை என தெரிவித்துள்ளார்.

சம்பவங்கள் இடம்பெற்ற பகுதிகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## 2017 இல் புதிதாக 1128 பேருக்கு வடக்கில் ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு இந்த வருடம் புதிதாக 1128 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலமான பாடசாலைகளுக்கு 8 பிரிவுகளாக ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வவுனியா தெற்கு வலய சிங்கள மொழிமூல பாடசாலைகளுக்கு கடந்த ஜனவரி மாதம் 46 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. அதில் சிங்களப் பாடத்துக்கு 15 பேரும் புவியியல் பாடத்துக்கு 3 பேரும் ஆங்கிலம், விவசாயம், தொழில்நுட்ப பாடங்களுக்கு தலா ஒவ்வொருவரும் சங்கீத பாடத்துக்கு 2 பேரும் குடியுரிமை பாடத்துக்கு 9 பேரும் நடன பாடத்துக்கு 6 பேரும் உளவியல் பாடத்துக்கு 4 பேரும் வரலாறு பாடத்துக்கு 4 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

இதேபோன்று ஜனவரி மாதத்தில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கு மனைப்பொருளியல் பாடத்துக்கான 26 ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளனர்.

தமிழ்மொழி மூலமான பாடசாலைகளுக்கு கடந்த மார்ச் மாதம், தமிழ்ப் பாடத்துக்கு 145 பேரும் புவியியல் பாடத்துக்கு 96 பேரும் வரலாற்று பாடத்துக்கு 59 பேரும் குடியுரிமை பாடத்துக்கு 104 பேரும் விவசாய பாடத்துக்கு 31 பேரும் தொழில்நுட்ப பாடத்துக்கு 70 பேரும் உளவியல் பாடத்துக்கு 28 பேரும் ஊடகவியல் பாடத்துக்கு 16 பேரும் நியமனம் பெற்றுள்ளனர். கடந்த மே மாதம் புவியியல் பாடத்துக்கு 11 ஆசியரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும் கடந்த ஜூன் மாதம் இரசாயனவியல் பாடத்துக்கு 11 பேரும், பௌதீகவியல் பாடத்துக்கு 16 பேரும், உயிரியல் பாடத்துக்கு 13 பேரும் இணைந்த கணித பாடத்துக்கு 10 பேரும் உயிரியல் தொழில்நுட்ப பாடத்துக்கு 15 பேரும் தொழில்நுட்ப அறிவியல் பாடத்துக்கு 2 பேரும் பொறியியல் தொழில்நுட்ப பாடத்துக்கு 12 பேரும் விஞ்ஞான பாடத்துக்கு 95 பேரும், கணித பாடத்துக்கு 45 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம், விஞ்ஞான பாடத்துக்கு 19 பேரும் கணித பாடத்துக்கு 4 பேரும் தொழில்நுட்ப அறிவியல் பாடத்துக்கு 4 பேரும் நியமனம் பெற்றுள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் புவியியல் பாடத்துக்கு இரு பிரிவாக 8 பேரும் சிங்கள பாடத்துக்கு 9 பேரும் வரலாற்று பாடத்துக்கு 9 பேரும் விஞ்ஞான பாடத்துக்கு 2 பேரும் வணிகம் மற்றும் கணக்கியல் பாடத்துக்கு 6 பேரும் நடன பாடத்துக்கு ஒருவரும் நியமனம் பெற்றுள்ளனர். மொத்தமாக பட்டதாரி ஆசிரியர்கள் 919 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

அதே போன்று தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில தேசிய டிப்ளோமா நிறைவு செய்த 209 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஆரம்ப கல்வி ஆசிரியர்களாக 124 பேரும், றோமன் கத்தோலிக்கம், வணிகம், உடற்கல்வி, மனைப்பொருளியல் ஆகிய பாடங்களுக்கு தலா 5 பேரும் ஆங்கில பாடத்துக்கு 8 பேரும் ICT பாடத்துக்கு 3 பேரும் வடிவமைப்பு தொழில்நுட்பத்துக்கு 4 பேரும் இந்து சமயத்துக்கு ஒருவரும் விஞ்ஞான பாடத்துக்கு 26 பேரும், கணித பாடத்துக்கு 6 பேரும் விசேட கல்விக்கு 9 பேரும், விவசாய பாடத்துக்கு 6 பேரும், சித்திர பாடத்துக்கு 2 பேருமாக மொத்தம் 209 பேர் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

கொல்கத்தா டெஸ்ட் 4ம் நாள்

### லோகேஷ் ராகுல் - ஷிகர் தவானின் ஆரம்ப இணைப்பால்

# எதிர்பாராத திருப்பத்தில் 5ம் நாளாட்டம்

## போட்டியின் முடிவு இந்தியாவின் கைகளில்

ஷிகர் தவான், லோகேஷ் ராகுலின் அரைச்சதங்கள் கொல்கத்தா டெஸ்டில் திருப்பத்தை ஏற்படுத்த, சமனிலையை நோக்கி நகர்ந்த போட்டியின் 5ஆவது நாளாட்டம் சுவாரசியமான கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

இந்திய் அணி முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களை எடுத்திருந்ததுடன், நேற்று முன்தினம் 3ஆம் நாளாட்ட நிறைவில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை எடுத்திருந்தது. அணித் தலைவர் சண்டிமல் (13), டிக்வெல (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஷமி அபாரம்**

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் அசத்தினர். ஷமி வீசிய 53ஆவது ஓவரின் 5வது பந்தில் டிக்வெல (35) சிக்கினார். அடுத்த ஓவரில் புவனேஷ்வர் தன் பங்கிற்கு ஷானகவை டக்-அவுட்டாக்கினார். மீண்டும் வந்த ஷமி இம்முறை சண்டிமலை (28) வெளியேற்றினார்.

இதனால் தொடர்ந்து 3 ஓவரில் மூன்று விக்கெட்டுக்கள் சரிந்தன. ஆனால், இலங்கை 'சுழல்' வீரர் ஹெரத், இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்தார்.

வழக்கம்போல, பின் வரிசை துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்த இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர். டில்ருவன் பெரேரா 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஹெரத் அரைசதம் கடந்தார். புவனேஷ்வர் 'வேகத்தில்' ஹெரத் (67) வெளியேறினார்.


லக்மல் (16) கிளம்ப, இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 294 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்தியா சார்பில் அதிகபட்சமாக ஷமி, புவனேஷ்வர் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

**தவான் அசத்தல்**

பின், 122 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது. லோகேஷ் ராகுல் - ஷிகர் தவான் ஜோடி அபாரமாக விளையாடியது. கமகே வீசிய இரண்டாவது ஓவரில் ராகுல், மூன்று பவுண்டரி அடித்தார். லக்மல் பந்தை தவான் பவுண்டரிக்கு விரட்டினார். இவர்களின் நிலையான ஆட்டத்தால் இலங்கை வீரர்கள் விரக்தி அடைந்தனர். ராகுல் 10ஆவது அரைசதம் கடந்தார். விரைவாக ஓட்டம் சேர்த்த தவானும் அரைசதம் எட்டினார். ஹெரத்தின் 29 மற்றும் 31வது ஓவரில் தவான் தலா ஒரு சிக்ஸர் அடித்து அசத்தினார். முதல் விக்கெட்டுக்கு 166 ஓட்டங்கள் சேர்த்தபோது, தவான் 94 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். போதிய வெளிச்சமின்மை காரணமாக, நான்காம் நாள் ஆட்டம் முன்னதாகவே முடிவுக்கு வந்தது. இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 171 ஓட்டங்கள் எடுத்து 49 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. ராகுல் (73), புஜாரா (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**வெற்றி வாய்ப்பு**

இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக ஓட்டங்கள் சேர்த்து, வலுவான இலக்கை நிர்ணயிக்கும் பட்சத்தில் வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. பொதுவாக கொல்கத்தா ஆடுகளத்தில் கடைசி நாள் ஆட்டத்தில் 250 ஓட்டங்களுக்கு மேலான இலக்கை எட்டுவது கடினம். எனவே தேநீர் இடைவேளைக்கு முன், இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஓட்டங்களை குவிக்க வேண்டும். பின், இலங்கை அணியை 30 முதல் 40 ஓவர்கள் வரை துடுப்பாட்டம் செய்ய அனுமதிக்க வேண்டும். ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால், இந்திய வேகங்கள் விக்கெட் வேட்டை நடத்தும் பட்சத்தில் சுலப வெற்றி பெறலாம். ஒரு



வேளை இதில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில், போட்டி சமனிலையில் முடியலாம்.

**விதி மீறிய பெரேரா**

ஷமி வீசிய 57ஆவது ஓவரின் கடைசி பந்தில் டில்ருவன் பெரேராவுக்கு நடுவர் நைஜல் லோங் (இங்கிலாந்து) எல்.பி.டபிள்யு., முறையில் 'அவுட்' கொடுத்தார். தொடக்கத்தில் அதிர்ச்சி அடைந்த பெரேரா, மறுமுனையில் இருந்த ஹெரத்தை பார்த்தார். பின், அப்படியே பின்னால் திரும்பி 'டிரெசிங் ரூம்' வெளியே அமர்ந்திருந்த தனது அணியினரை பார்த்தார். அவர்கள் 'ரிவியூ கேட்கலாம்' என 'சிக்னல்' தந்ததை போல, திடீரென 'ரிவியூ' கேட்டார். இதில், பந்து 'அவுட்சைடில்' பட்டது தெரியவர, ஆட்டமிழப்பல்ல என்று கொடுத்ததால், பெரேரா தப்பினார்.

ஐ.சி.சி., விதிப்படி, நடுவர் முடிவு தவறு என உணர்ந்தால், அடுத்த 15 வினாடியில் 'ரிவியூ' கேட்க வேண்டும். நேற்று இதை பெரேரா மீறினார். தவிர, களத்தில் இல்லாத சக வீரர்களின் உதவியை கேட்கக்கூடாது. ஆனால், பெரேரா இந்த விதியையும் மீறியது, 'டிவி ரீப்ளேயில்' நன்றாக தெரிந்தது.

கடந்த மார்ச் மாதம் இந்தியாவுக்கு எதிரான பெங்களூரு டெஸ்டில், களத்தில் இருந்த அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித் 'ரிவியூ' கேட்க 'டிரெசிங் ரூம்' வெளியே அமர்ந்திருந்த அணியினரின் உதவியை நாடினார். இதற்கு வேறாலி உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவிக்க பெரும் சர்ச்சையை கிளப்பியது. நேற்று இதே வழியை பெரேராவும் பின்பற்றினார்.

**இலங்கை மறுப்பு**

பெரேரா சர்ச்சை குறித்து இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், 'எங்கள் வீரர் டில்ருவன் பெரேராவுக்கு எல்.பி.டபிள்யு., முறையில் 'அவுட்' கொடுக்கப் பட்டது. அந்த நேரத்தில், 'ரிவியூ' வாய்ப்பு அணியிடம் கைவசம் உள்ளதா என்ற குழப்பத்தில் பெரேரா இருந்தார். இதை நடுவர் நைஜல் லோங்கிடம் (இங்கிலாந்து) உறுதி செய்யுமாறு, மறுமுனையில் இருந்த ஹெரத்திடம் கேட்டார். இதனால்தான், பெரேரா 'ரிவியூ' கேட்க தாமதமானது. மற்றபடி, 'டிரெசிங் ரூமிலிருந்து' எவ்விதமான 'சிக்னலும்' தரவில்லை. எங்கள் வீரர்கள் ஐ.சி.சி., விதியை முறையாக பின்பற்றுகிறோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'ஹெல்மெட் டை' தாக்கியது**

ஆட்டத்தின் 72ஆவது ஓவரின் இரண்டாவது பந்தை லக்மலுக்கு 'பவுன்சராக' வீசினார் புவனேஷ்வர். இதனால், பந்து பட்ட வேகத்தில் லக்மலின் 'ஹெல்மெட்' வலதுபுற 'லாக்' பறந்தது. பின், மறுமுனையில் நின்றிருந்த ஹெரத் வந்து உடல்நிலை குறித்து விசாரித்தார். அதிர்ஷ்டவசமாக எவ்வித காயமும் ஏற்படவில்லை.

**3ஆவது முறை**

முதல் இன்னிங்சில் இந்தியாவின் புவனேஷ்வர் (4 விக்.), ஷமி (4), உமேஷ் (2) இணைந்து அனைத்து விக்கெட்டையும் வீழ்த்தினர். இதன் மூலம், சொந்த மண்ணில் ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டையும் இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் வீழ்த்துவது 3ஆவது முறையாக நடந்தது. கடைசியாக, 1983ல் அகமதாபாத் டெஸ்டில் (எதிர்-மே.தீவுகள்) கபில் (9), பல்விந்தர் சாந்து (1) 10 விக்கெட்டையும் வீழ்த்தி இருந்தனர். இந்த நிகழ்வை முதல் முறையாக, இந்தியாவின் கபில் (5), மதன் லால் (5) இணைந்து இங்கிலாந்துக்கு எதிரான மும்பை டெஸ்டில் 1981ல் செய்திருந்தனர்.

**இதுதான் குறைவு**

முதல் இன்னிங்ஸில் அஷ்வின் (8), ஜடேஜா (1) இணைந்து 9 ஓவர் மட்டுமே வீசினர். இதன் மூலம், இந்திய மண்ணில் நடந்த டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் சுழற்பந்து வீச்சாளர்கள் குறைந்த ஓவர் வீசிய போட்டியாக இது அமைந்தது. இதற்கு முன், கடந்த 1987ல் டில்லி டெஸ்டில் (எதிர்-மே.தீவுகள்) 'சுழல்' வீரர்கள் 16 ஓவர் வீசியதே குறைவாக இருந்தது.

**7 ஆண்டுக்குப்பின்...**

இரண்டாவது இன்னிங்ஸில் தொடக்க ஜோடியான ராகுல், தவான் 166 ஓட்டங்கள் சேர்த்தனர். இதன் மூலம், 7 ஆண்டுக்குப் பின் இரண்டாவது இன்னிங்சில் 100 ரன்களுக்கு அதிகமாக முதல் விக்கெட்டுக்கு சேர்த்த இந்திய ஜோடியானது. கடைசியாக, 2010ல் செஞ்சுரியனில் நடந்த டெஸ்டில் காம்பிர், சேவக் (எதிர்- தென்னாபிரிக்கா) ஜோடி 2ஆவது இன்னிங்ஸில் 137 ரன்கள் சேர்த்திருந்தனர்.

**2ஆவது இடம்**

ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்டில் முதல் விக்கெட்டுக்கு இந்தியா சார்பில் அதிக ஓட்டம் சேர்த்த ஜோடிகள் வரிசையில் ராகுல், தவான் (166 ஓட்.) 2வது இடம் பிடித்தனர். முதலிடத்தில் லக்ஸ்மன், நவ்ஜோத் சித்து (191 ஓட்., எதிர்- ஆஸி., 1998) உள்ளது.

ஒட்டுமொத்தமாக இவ் மைதானத்தில் 100 ஓட்டங்களுக்கு அதிகமாக சேர்த்த 4ஆவது இந்திய ஜோடியானது.

**9வது அரைசதம்**

இந்த ஆண்டில் இதுவரை டெஸ்ட் போட்டியில் அதிக அரை சதம் அடித்தவர்கள் பட்டியலில் தென்னாபிரிக்காவின் எல்கருடன் (20 இன்னிங்ஸ்) முதலிடத்தை ராகுல் (13 இன்னிங்ஸ் ) பகிர்ந்து கொண்டார். இருவரும் தலா 9 அரை சதம் அடித்துள்ளனர்.

* * *

லா லிகா கால்பந்து

## பார்சிலோனா வெற்றி நடை

லா லிகா கால்பந்து தொடரில் முன்னணி அணியான பார்சிலோனா 3-0 என லெகனஸ் அணியை வீழ்த்தியது. சுவாரஸ் இரண்டு கோல்கள் அடித்து அசத்தினார்.

லா லிகா கால்பந்து லீக் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் முன்னணி அணியான பார்சிலோனா, லேகனஸ் அணியை எதிர்கொண்டது. இதில் சுவாரஸ் இரண்டு கோல்களும் பவுலினோ ஒரு கோலும் அடிக்க பார்சிலோனா 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் அடித்த பந்து லேகனஸ் கோல் கம்பத்தை நோக்கிச் சென்றது. அதை லேகனஸ் கோல் காப்பாளர் சிறப்பாக தடுத்து விட்டார். ஆனால் தடுத்த பந்து சுவாரஸ் நோக்கிச் செல்ல அதை சுவாரஸ் கோலாக மாற்றினார். சுவாரஸ் கோலால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனா 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேர ஆட்டத்திலும் பார்சிலோனா கையே ஓங்கியது. 60ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்ததுபோல் மீண்டும் ஒரு கோல் அடித்தார் சுவாரஸ். 90ஆவது நிமிடத்தில் பவுலினோ ஒரு கோல் அடிக்க பார்சிலோனா 3-0 என வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா 12 போட்டிகளில் 11 வெற்றியின் மூலம் 34 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் நீடிக்கிறது. வாலென்சியா 27 புள்ளிகளுடன் 2ஆவது



இடத்தில் உள்ளது. அட்லெடிகோ மட்ரிட் அணிக்கெதிரான போட்டியை சமன் செய்ததன் மூலம் ரியல் மட்ரிட் 12 ஆட்டத்தில் 7 வெற்றி, 3 சமனிலை மூலம் 24 புள்ளிகள் பெற்று 3ஆவது இடத்தில் உள்ளது.




யாழ். இந்துக் கல்லூரியின் செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்கள் கண்காட்சி கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா கலந்து கொண்டார்.


## UNIVERSITY OF JAFFNA

## INVITATION FOR BIDS

### Hotel Accommodation Service 2018/2019

1.Sealed Quotations are invited for the **"Hotel Accommodation Service 2018/ 2019 for the University of Jaffna"** from the competent registered Hotels.The bidder should have a star class hotel and registered under Government entity–Tourism Development Authority/Northern Tourism Development Association.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for award, the successful bidder shall not have been blacklisted by any government organization.

4.Interested bidders may obtain further information from the **Assistant Register, Administration Branch, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00hrs to 16.00hrs.**

5.A complete set of Bidding documents in English language shall be purchased by the bidders on the submission of a written request to the **Assistant Register (Administration), University of Jaffna (T.P 021 222 6517)**, from **20th of November, 2017** until **5th of December, 2017** from **9.00hrs to 15.00hrs**, upon payment of a non-refundable deposit of **Rupees one thousand (Rs 1000/-)at the shroff counter of the University of Jaffna**.

6.Bids shall be delivered or sent by registered post to the **Registrar, University of Jaffna, P.O.Box 57, Thirunelvely, and Jaffna** to reach **on or before 10.00hrs on 5th of December, 2017**. Bids will be opened soon after closing at the **Board room of the University of Jaffna**, in presence of the bidder's representatives who choose to attend.

7.Bids shall be valid for a period of **90 days** from the date fixed for closing of bids or any extended period.

Chairman,
Department of Procurement Committee,
University of Jaffna.
P.O.Box 57, Thirunelvely,
Jaffna.

(C-429)


# மரண அறிவித்தல்



மண்ணில் 1942 - 04 - 13

விண்ணில் 2017 - 11 - 19

## அமரர் கந்தையா மார்க்கண்டு

அவர்கள் 2017.11.19 ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகிவிட்டார். அன்னார் திரவியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவனும் நளாயினி, தயாளினி (சுவிஸ்), சுதாஜினி (லண்டன்), கிரிதரன் (லண்டன்), மயூரன் (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்) ஆகியோரது பாசமிகு தந்தையும் சிவச்சந்திரன், ரவீந்திரராஜா (சுவிஸ்), சாந்தமூர்த்தி (லண்டன்), கௌரி (லண்டன்), பிரஹர்சனி (லண்டன்) ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.11.2017 இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கரவெட்டி.

தகவல்,
குடும்பத்தினர்.

(C-445)

# இராசி பலன்

20.11.2017
(கார்த்திகை 04, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
துதியை முன்னிரவு 8.53 மணிவரை
கேட்டை பின்னிரவு 12.42 மணிவரை
சுபநேரம் 12.09-1.39 மணிவரை
இராகுகாலம் 7.39-9.09 மணிவரை
உலக சிறுவர் உரிமைகள் தினம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி, கார்த்திகை<br>பின்னிரவு 1.35 மணிக்கு<br>தனு-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத<br>சூரி, சந் | குரு<br>சுக் | செவ் |

**மேடம்** [illegible] தொடங்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**இடபம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சியுண்டு, காரிய அனுகூலமுண்டு, வியாபார விருத்தியுண்டு, தேக நலனில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கன்னி** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உயர்வான சிந்தனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**தனுசு** தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், விரயங்கள் கூடும்.


**மகரம்** எதிர்பாராத வகையில் தளவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**கும்பம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழில் முன்னேற்றமுண்டு, அந்நியர் உதவியுண்டு.

**மீனம்** [illegible] கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

# வெள்ளவாய்க்காலாக மாறியுள்ள வீதிகளை புனரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

வெள்ளவாய்க்காலாக காணப்படும் வீதிகளை பொது மக்களின் பாவனைக்கு உகந்ததாகப் புனரமைத்து தருமாறு வல்வெட்டித்துறை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவ மழை காலத்தில் வல்வெட்டி, பிள்ளையார் கோவில் கிழக்கு பக்கமாக செல்லும் வீதியின் இருமருங்கில் காணப்படுகின்ற புல் பூண்டுகள் போக்குவரத்திற்கு இடையூறாகவும் வெள்ளம், சேறு சகதிகள் தேங்கியும், வீதியின் இரு மருங்குகளுக்கும் சரியாக கிரவல் மண் இடப்படாமல் பதிந்தும் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். கடந்த 2 வருடங்களாக கோரிக்கை விடப்பட்டும் இதுவரை உரியவர்கள் கண்டுகொள்ளவில்லை.

சேகண்டி வீதியில் இருந்து வல்வெட்டித்துறை கடற்கரை வரை செல்லும் வீதி உட்பட பல ஊர்களில் இருந்து வரும் வெள்ள நீர், சேகண்டி சந்தியில் ஒன்று சேர்கின்றன.

ஆனால் இந்த வீதி புனரமைக்கப்பட்ட போதும் வெள்ளம் ஓடச்செய்வது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. வெள்ளம் வழிந்து ஓடக்கூடிய வகையில் புனரமைக்கப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல் இந்த வீதிகளில் பல நாட்கள் தேங்கி நிற்கும் வெள்ளம் காரணமாக பல நோய் தொற்றுக்களும், நுளம்பு தொல்லையும் ஏற்படுகின்றது. இந்த வீதிகள் வெள்ளவாய்க்கால்கள் போன்று காட்சியளிக்கின்றன.

பல கிராம மக்களும் எமது பகுதிக்கே குடி தண்ணீர் எடுக்க வருகின்றார்கள். இந்த வீதி மழை காலத்தில் சீரற்ற வகையில் இருக்கின்றது. மேலும் மின்குமிழ்கள் இவ்வீதிகளுக்கு பொருத்தவேண்டும் என மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால் ஒளிரக் கூடிய மின்குமிழ்கள் பொருத்தப்படவில்லை.எனவே மழை காலங்களில் போக்குவரத்து அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே மழை வெள்ளம் உரிய முறையில் கடலை நோக்கிச் சென்றடைய வழி வகுத்து மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கான தீர்வை பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# பயனாளிகள் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வடக்கு ஜே/347 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவித் தொகை பெற்றுக்கொள்ளும் பயனாளிகளுக்கு 2017 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை மந்துவில் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மீளாய்வில் கலந்து கொள்ளும் பயனாளிகள் குடும்பப் பதிவு அட்டை, பொதுசன மாதாந்த பதிவு அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை தவறாது கொண்டு வருமாறு மந்துவில் வடக்கு ஜே/ 347 பதில் கிராம உத்தியோகத்தர் கானமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10-101)


# பாடசாலை பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் டானியல் பூவர் அரங்கில் அதிபர் சி.சுதாகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் மா.ஆனந்தகுமார், சிறப்பு விருந்தினராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பிறேமாநிதி அம்பிகை பாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# இலவச மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் வெற்றிலைக் கேணி ஜே/432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது. (இ-64)

# யாழில்தான் போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகம்

## ஜனாதிபதி செயலணி தகவல்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யாழ். மாவட்டத்தில்தான் போதைப் பொருள் பாவனையாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலணியின் போதை ஒழிப்பு மற்றும் தடுப்புப் பிரிவின் வளவாளர் எஸ்.தினேஸ் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் கடந்த 17 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் குறித்து, அந்தந்த பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார உத்தியோகத்தர்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-10-60-101)




# மணிவிழா

(யாழ்ப்பாணம்)

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தின் உப அதிபர் தனலட்சுமிதேவி சிவகுருவின் மணிவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.35 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் ஆ.இராசரத்தினம் தலைமையில் இடம்பெறும். (இ-10)

# சிகை ஒப்பனையாளர் சங்க நிர்வாகத் தெரிவு நாளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாவை பாரதி சனசமூக நிலைய பொது நோக்கு மண்டபத்தில் சங்கத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட் கலந்து கொள்வார்.(இ-7)

# யாழ்.கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கல்விவலய விசேட கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நாவலர் வீதியிலுள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT) யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக பரந்தன் மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு போஷகர் பெப்ஷிங், வவுனியா வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன தலைவர் ஏ.சுப்பிரமணியம் மற்றும்சிவன் அறக்கட்டளைநிறுவுநர் க.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-10)

# கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து அனைவரும் புதிய பாதையில் பயணிக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் கூரே தெரிவிப்பு



(கரணவாய்)

அரசியல் அமைப்பினைக் கொண்டு செயற்படுத்தும் சமாதானத்தை விட பௌத்த தர்மத்தின் மூலம் சாந்தி சமாதானத்தினை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

புத்தூர் மடிக்கே பஞ்ச ஹீத வித்தியாலயத்தின் பொன் விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் புதிய நூலக கட்டடத்தினை திறந்து வைத்து உரை நிகழ்த்தும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் அனைத்தையும்மறந்துஅனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி புதிய பாதையில் பயணிக்கவேண்டும் தன்னை கொல்லவந்தநபருக்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு அளித்து விடுதலை செய்திருக்கின்றார். அதனை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும்.

வெற்றி பெற்றுவிட்டோம் என்ற இறுமாப்பை களைந்து பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களை வெல்ல இதுபோன்ற முன்னேற்ற கரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் திருகோணமலையிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் பௌத்த குருமார்கள் வடக்கிற்கு வந்து இது போன்ற நல்லிணக்க பணிகளை முன்னெடுப்பதனை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வணக்கங்கள். இந்த நாட்டில் புத்த பெருமானின் போதனையை கடைப்பிடித்து ஒழுகினால் நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்பட்டுவிடும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த 17 ஆம் திகதி காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல்தர்சன ஹெட்டியாராச்சி, திருகோணமலை இராஜகிரிய ஆனந்த மகா நாயக்க தேரர், ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன், மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (இ-60)



நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர் பாராளுமன்ற அமர்வு அண்மையில் இடம்பெற்ற போது... (படம்:கரணவாய் செய்தியாளர்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/109 , ஜே/110 பரவைக்குளம் மற்றும் மாரி அம்மன் கோயிலடி பிரதேசங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 220 பேருக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சமூக மட்ட அமைப் புக்கள் பற்றி பிரதேச மட்டத்தில் 'சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டும் வேலைத்திட்டப் பயிற்சிப் பட்டறை கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன், சமுர்த்தி முகாமையாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-19)




# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 24 செவ் 1 இல்
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7201

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 62 செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: QS/ஓமான்
தொ.இ: B/7204

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 27 சூரி செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/7205

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 24 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7208

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 56 சூரிசெவ் 7 இல்
உயரம்: 161cm
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/6132

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 24 உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc/உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/6134

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 52 செவ் 2 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்
தொ.இ: G/6135

பிறப்பு: 1979 RC
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா: 84 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்
தொ.இ: G/6143

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. ப.நிஷாந்தன்
சித்திர ஆசிரியர்
(மாகாண நிலை)



திரு. சி.கமலமோகன்
உடற்கல்வி ஆசிரியர்
(தேசிய நிலை)



திரு. நா.கேதீஸ்வரன்
கணித ஆசிரியர்
(மாகாண நிலை)

எமது கல்லூரியில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் எம் சக ஆசிரியர்கள் 2016 ஆம் ஆண்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமைக்காக கல்வி அமைச்சினால் 'குரு பிரதீபா பிரபா' விருதை வழங்கி கௌரவித்தமையை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
கிளி/பளை மத்திய கல்லூரி, பளை.

(சி-436)





# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/கைவேலி கணேச வித்தியாலயத்தில் 2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த கு.செவ்வந்தன் அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(397)

பாடசாலைச் சமூகம் மு/கைவேலி கணேச வித்தியாலயம்.

# கற்பகபுரம் கிராமத்தினுள் நுழைந்து வாள்வெட்டுத் தாக்குதல்

## மூவர் கைது; ஆட்டோவில் கடத்தப்பட்ட நபர் மீட்பு

(மல்லாவி)

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் வவுனியா-மன்னார் வீதியில் உள்ள புதிய கற்பகபுரம் கிராமத்தினுள் உள் நுழைந்த 20. பேர் கொண்ட காடையர் குழு ஒன்று வாள் வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டதுடன், இளைஞர் ஒருவரை ஆட்டோவில் கடத்திச் சென்ற போது, கடத்தப்பட்ட இளைஞரை மீட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாகவும் கடத்தலுக்கு பயன்படுத்திய ஆட்டோவையும் கைப்பற்றியுள்ளதாகவும் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

புதிய கற்பகபுரம் கிராமத்தினுள் வாள் பொல்லுகளுடன் நுழைந்த 20 பேர் கொண்ட காடையர் குழு ஒன்று வீடுகள் மற்றும் வீதிகளில் காணப்பட்ட இளைஞர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டதுடன் வாள் வெட்டுத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு நிரோசன் (வயது 30) என்ற இளைஞனை ஆட்டோவில் கடத்திச் சென்றுள்ளனர்.

இவ்வாறு இளைஞர் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், கிராம இளைஞர்கள் ஒன்று திரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஆட்டோவைத் துரத்திச் சென்று பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து மடக்கி பிடித்ததுடன் பொலிஸ் நிலையத்திலும் ஒப்படைத்துள்ளனர்.


இதனையடுத்து, ஆட்டோவில் கடத்தப்பட்ட இளைஞரை பொலிஸார் மீட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற ரீதியில் இளைஞரைக் கடத்திச் சென்ற 3, சந்தேக நபர்களையும் கைது செய்த நிலையில், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆட்டோவையும் கைப்பற்றியுள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞர் காயமடைந்த நிலையில் இருந்ததை அடுத்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொலிஸார் அனுமதித்துள்ளனர்.

இதேவேளை, கைதான சந்தேக நபர்களிடம் நடைபெற்ற ஆரம்பகட்ட விசாரணை களின் போது, கற்பகபுரம் கிராமத்தில் நுழைந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்ட நிலையில் தப்பிச் சென்றுள்ள ஏனைய சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாவும், தப்பிச் சென்ற நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகவும் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)




## பேராறு நீர்ப்பாசனத் திட்டத்துக்காக புதைக்கப்பட்ட குழாய்கள் மீள அகழ்வு



(குருமன்காடு)

வவுனியாவில் பேராறு திட்டத்திற்காக புதைக்கப்பட்ட குழாய்கள் தரமற்றவை என மீள அகழப்படுகிறது.

வவுனியாவில் நீர்ப்பாசனத்திட்டத்திற்காக மண்ணில் புதைக்கப்பட்ட பெறுமதியான குழாய்கள் தரமற்றவை என தெரிவித்து மீள் அகழப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் பேராறு திட்டத்தின் ஊடாக வவுனியா மாவட்டத்திற்கான நீர்த் தேவையை பூர்த்தி செய்ய 2013 ஆம் ஆண்டு முதல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பேராற்றில் இருந்து நீர்த்தாங்கிகளுக்கு நீரை கொண்டு வருவதற்காக பெருந்தொகை கறு ப்பு நிற குழாய்கள் நிலத்தில் புதைக்கப்பட்டன.

இத்திட்டத் தினை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவில் இந்திய நிறுவனம் ஒப்பந்தமெடுத்து செயற்படுத்தி வந்திருந்தது.

இந்நிலையில் குறித்த குழாய்கள் தரமற்றவை என தெரிவித்து மீள அக் குழாய்கள் மண்ணில் இருந்து அகழப்பட்டு வருவதுடன் அதற்கு பதிலாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீல நிற குழாய்களை புதைப்பதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக பூந்தோட்டம் வீதியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருவதுடன் வீதிப்போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. (2-250)

## கேரளக்கஞ்சா பொதிகளுடன் பேருந்து நிலையத்தில் பெண் கைது

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து முல்லைத்தீவில் இருந்து புத்தளத்திற்கு பேருந்து மூலமாக கடத்திச் செல்லப்பட்ட 2, கிலோ 32. கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகளுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் முல்லைத்தீவில் இருந்து புத்தளத்திற்கு பயணித்த, பேருந்தை வவுனியா அரச பேருந்து நிலையத்தில் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, புத்தளத்திற்கு விற்பனைக்கு தயாராக சிறு சிறு பைகளில் இடப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட 02. கிலோவும். 32. கிராமும் நிறையுடைய கேரளக் கஞ் ாவு டன் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 42. வயதுடைய இஸ்லாமிய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ. மகிந்த வில்வ ஆராச்சிதலைமையில்பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் கொஸ்தாபல்கள் ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரே கேரளக் கஞ்சா கடத்தலை முறியடிப்பு செய்துள்ளனர்.



இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸ் நிலைய தகவலில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250-15)

## கொட்டப்பட்ட மண் பரவப்பட்டு வீதி செப்பனிடப்படுவது எப்போது?




(வவுனியா)

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட திருநாவற்குளம் முதலாம் குறுக்கு தெருவில் வீதி புனரமைப்பிற்காக கொட்டப்பட்ட மண்ணால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பருவமழை தொடங்கியுள்ள காலகட்டத்தில் வீதி புனரமைப்புக்காக கொட்டப்பட்ட மண்ணானது கடந்த ஒரு மாத காலமாக சீர்செய்யப்படாமையால் மக்கள் பயணம் செய்ய பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினர்.

திருநாவற்குளம் வீதியானது கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பாக திருத்த வேலைகளை ஆரம்பித்த ஒப்பந்தகாரர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் பாடசாலை செல்லும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் வயோதிபர்கள். இதனூடான போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

150 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேருக்கு மேற்பட்டவர்கள் இவ்வீதியை பயன்படுத்தி வருவதுடன் வாகனங்கள் சென்று வர எந்தவிதமான வழிகளும் இல்லாத நிலையில் இவ் வீதியில் அமைந்துள்ள வீடுகளிலுள்ள வாகனங்களை வேறு இடங்களில் நிறுத்தி விட்டு வீட்டிற்கு நடந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனை கருத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து இவ் வீதியை சீர்செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

## சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பராமரிப்பிலிருந்த காணி அளவீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள அரச காணி அளவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழீழ விடுதலை புலிகளினால் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டு நூற்றுக் கணக்கான மக்களிற்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட பண்ணைக் காணியே இவ்வாறு நில அளவீடு செய்யப்பட்டு வருகின்றது. மீள்குடியேற்றத்தின் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி பின்னர் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் காணியை அளவீடு செய்யும் பணிகள் கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



குறித்த அளவீடு செய்யப்படும் காணியில் மக்களின் காணிகளும் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். காணிகள் அளவீடு செய்வதன் நோக்கம் தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-315)

## போதிய பௌதீக, ஆளணி வளங்களின் பற்றாக்குறையுடன் இயங்கும் இ.போ.ச. கிளிநொச்சிச்சாலை

(கண்டாவளை)

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலைக்கான போதிய பௌதீக மற்றும் ஆளணி வளங்களின் பற்றாக்குறை காணப்படுவதனால் மக்களுக்கு உரிய சேவையை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதாக சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சிச்சாலை கடந்த 2010ஆம் ஆண்டு முதல் மீள இயங்க ஆரம்பித்து ஏழு ஆண்டுகள் கடந்த போதும், அதற்கான போதிய வளங்கள் இன்றிக் காணப் படுகின்றன.

இவ்வாறு வளப்பற்றாக் குறையினால் இயங்குவதனால் போதிய சேவையை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளதாக சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதாவது, தற்போதுள்ள 30 பேருந்துகளில் 25 வரையான பேருந்துகளே சேவைக்குட்படுத்தப்படுகின்றன்.

இதில் எண்பதுவீதமான பேருந்துகள் மிகவும் பழையனவாகவே காணப்படுகின்றன.

இதைவிட சாரதிகள் நடத்துநர்கள், திருத்துநர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

அத்துடன், போதிய கட்டட வசதிகள் இன்றி ஏற்கனவே தமிழீழ போக்குவரத்துக் கழகத்தினால் பயணிகளுக்காக அமைக்கப்பட்ட தரிப்பிடம் மற்றும் நேரக்காப்பாளருக்கான கட்டடம் என்பவற்றில் அலுவலகம் இயங்கி வருகின்றது.

இதனால்போதிய சேவையை வழங்கமுடியா திருப்பதாகவும் வளங்கள் கிடைக்கும் பட்சத்தில் உரிய சேவை களை வழங்க முடியும் என மேற்படி நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

# முல்லைத்தீவில் 38 ஆயிரத்து 33 காணிப்பிணக்குகள் பதிவு

(மல்லாவி )

**முல்லைத்தீவு மாவட்டத்தில் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்பு 38 ஆயிரத்து 33 காணிப் பிணக்குகள் பதிவாகியுள்ளதாக காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் 138 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன.

இவ்வாறான நிலையில், இடப் பெயர்வின் பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின் பின்னர் அதிகளவான காணிப் பிணக்குகள் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

காணிப்பிணக்குகள்எனும் போது, காணிகளற்ற குடும்பங்கள், காணி ஆவணங்கள் இல்லாமை, காணி ஆவணங்கள் யுத்த காலத்தில் தொலைத்து போனமை,

தனி நபர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகள், படைத் தரப்பினரால் கையகப்படுத்தி வைத்திருக்கும் காணிகள், சட்ட விரோதமான முறையில் காணிக் கொள்வனவு, விற்பனையில் ஈடுபடல், பொதுத் தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் குடியிருத்தல் என பலதரப்பட்ட வகையில் காணிப் பிணக்குகள் காணப்படுகின்றன.

இதனடிப்படையில், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 5 ஆயிரத்து 507 காணிப் பிணக்குகளும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 11 ஆயிரத்து 549, காணிப் பிணக்குகளும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 13 ஆயிரத்து 696 காணிப் பிணக்குகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 82 காணிப் பிணக்குகளும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 5 ஆயிரத்து 457 காணிப் பிணக்குகளுமாக மொத்தம் 38 ஆயிரத்து 33 காணிப் பிணக்குகள் பதிவாகியுள்ளன.

இதில் வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் உள்ள காணிப் பிணக்குகள் இணைக்கப்படவில்லை.

தற்போது இக் காணிப் பிணக்குக்கு படிப்படியாக தீர்வு காணப்பட்டு வருவதாகவும் காணி அமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினர் கையகப் படுத்தி வைத்திருக்கும் காணிகளை விடுவிப்பதில் பல்வேறு காரணங்களைக் கூறி இழுத்தடிப்புச் செய்யப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

## காட்டில் அரியவகை மிருகத்தை வேட்டையாடிய நபர்கள் கைதாகினர்

(மல்லாவி )

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள ஐயங்கன் குளம் கிராம காட்டுப் பகுதியில் அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டு வரும் வன ஜீவராசிகளில் ஒன்றான உக்கிளான் எனும் அரிய வகை இன மிருகத்தை இறைச்சிக்காக வேட்டையாடி கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜ. பி. இராஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் வேளை நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து ஐயங்கன் குளம் கிராமத்திலுள்ள காட்டு பகுதியில் இறைச்சிக்காக வேட்டையாடப்பட்ட உக்கிளான் மிருகத்தை கொண்டு சென்ற இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் கைப் பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள தடயப் பொருட்கள் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)



## மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

வன்னிக்குறோஸ் சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் ஒழுங்குபடுத்தலில் விசன் கெயார் நிறுவனத்தின் சிறந்த கண் பரிசோதனை மூலம் மறைந்த முன்னாள் வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதனின் ஞாபகார்த்த இலவச மூக்குகண்ணாடிகள் புதுக்குடியிருப்பு மண்ணின் மைந்தனும் லண்டனில் வசித்து வருபவருமான சி.தவசீலன், யாழ்ப்பாண மண்ணின் மைந்தனும் லண்டனில் வசித்து வருபவருமான றென்சிரவியின் நிதிப் பங்களிப்போடு கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலகர் அலுவலகத் தில் 179பயனாளிகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வைத்தியகலாநிதி சி.சிவமோகன்,மறைந்த முன்னாள் பிரதி அவைத்தலைவர் அன்ரனிஜெயநாதனின் மகன் பீற்றர் இளஞ்செழியன், சி.தவசீலன், றென்சிரவி சிலாவத்தை க.தொ.கூ. சங்கத்தின் தலைவர் வை.கெங்காதரன்,ஆசிரியர் செந்தூரன்,கிராம அமைப்புகள் ஆகியோர் கலந்து கொண்டு கண்ணாடிகளை வழங்கி வைத்தனர்.(2-310)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் 2017 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலைக்கு ஒரு இலட் சம் ரூபா பெறுமதியான மேலைத்தேய பாண்ட் வாத்திய ங்கள் கடந்த 16 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. மேலைத் தேய வாத்தியங்களை அக்கராயன் பிரதேச அமைப்பாளர் தயாபரன் பாடசாலை சமூகத்திடம் கையளித்தார்.

## மாவீரர்களின் தகவல்களை தந்து உதவுமாறு பெற்றோருக்கு அழைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வில் கலந்து கொள்ள வருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஏற்பாட்டாளர்கள்,குறித்த பகுதியில் வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தகாலத்தில் வீரகாவியமான 400 இற்கு மேற்பட்ட மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டதாகவும் குறித்த பகுதியில் இம்முறை எந்தவித அரசியல் தலையீடுகளுமின்றி மாவீரர்களின் உறவுகள் பொது அமைப்புக்களால் சிறப்புற நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வித்துடல்கள் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்,உறவினர்கள் மற்றும் அனைவரையும் இந்த புனிதமான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதோடு இந்நிகழ்வின் ஏற்பாடுகளுக்காக குறித்த பகுதியில் வித்துடல்கள் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்,உறவினர்கள் தம்மை தொடர்புகொண்டு தமது மாவீரரானவர்களின் தகவல்களை தந்துதவுமாறு கோருகின்றனர்.

மேலதிக தொடர்புகளுக்கு 077 234 2671, 077 962 6892 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-281)

## கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி ஒன்று சேர்க்கும் முகாமைத்துவ நிகழ்வு

### மன்னாரில் நடைபெற்றது



(மன்னார்)

ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வகைப்படுத்தி ஒன்று சேர்க்கும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விசேட நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னார் நகரசபையின் செயலாளர் எக்ஸ்.எல். றெனால்ட் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்விற்கு வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் கலந்து கொண்டு செயல் திட்டத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே. துரம், கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் சங்கம் மற்றும் சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் நகர சபை அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மனித செயற்பாடுகளின் காரணமாக அதிகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்வதனை குறைப்பதற்கும், உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை வகைப் படுத்தவும், முறையற்ற விதத்தில் கழிவினை வெளியேற்றுவதால் ஏற்படும் சூழல் பாதிப்பை குறைப்பதற்கும், கழிவுகளை வகைப்படுத்தி உரிய நிறப் பைகள் அல்லது கொள்கலன்களில் தரம் பிரித்துச் சேகரித்து வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் சமூக மட்டக் குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்ப வைபவமாக குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது முதற்கட்டமாக நிறப்பைகள் மற்றும் வழிகாட்டல். துண்டுப்பிரசுரங்கள் என்பன சமூக மட்டக் குழுக்களின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

பொது மக்கள் சமூக மட்டக் குழுக்களிடமிருந்து நான்கு நிறப் பைகளைப் பெற்று, இலகுவில் உக்கக்கூடிய கழிவுகள் மற்றும்சமையலறைக்கழிவுகளை பச்சை நிறப் பைகளிலும் காட்போட் மற்றும் கடதாசி கழிவுகளை நீலநிறப் பைகளிலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை செம்மஞ்சள் நிற பைகளிலும், கண்ணாடி மற்றும் கண்ணாடிப் போத்தல் கழிவுகளை சிவப்பு நிற பைகளிலும் கழிவுகளைத் தரம்பிரித்து சேகரித்து வழங்குமாறு நகர சபை செயலாளரினால் அறிவித்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-4)





கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்பு கிராமசேவை அலுவலர் பிரிவின் மூத்தோர் நன்மதிப்பு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் அ.நவரத்தினம் தலைமையில் சோலைநகர் சேரமான் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நயினை அன்னை சிவகாமி அறக்கட்டளை இயக்குநர் சி.மகாதேவா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, அறிவொளி வலயத்தின் மாகாணப் பணிப்பாளர் சி.சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கத் தவறினால் அடுத்த தலைமுறை ஆயுதம் தூக்க நேரிடும்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

இப்போது யுத்தம் இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் சத்தம் இல்லாமல் தமிழ்ச் சிறுபான்மை இனத்தைப்பெரும்பான்மைக்குள் கரைத்து முழு இலங்கையையும் பௌத்த சிங்கள நாடாகக் கட்டமைக்கும்முயற்சியை இப்போதும்தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. அரசாங்கம் எமக்கான தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கத் தவறினால் எமது பிரதேசத்தை ஆட்சி செய்யும் அரசியல் அதிகாரத்தை எங்களிடம் தரத்தவறினால், நாங்கள் இப்போது கைகட்டி நின்றாலும் அடுத்த தலைமுறை ஆயுதம் தூக்குகின்ற நிலை நேரிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மரநடுகை மாத விழா சங்கிலியன் பூங்காவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,நான் சந்தித்த ஒரு அம்மையார் தனது பேரக்குழந்தை துப்பாக்கிப் பொம்மையுடனேயே விளையாட விரும்புவதாகவும் அவர் ஒரு முன்னாள் போராளி என்றும் குறிப்பிட்டார். அதற்குப் பதிலாக, எல்லாக் குழந்தைகளுக்குமே துப்பாக்கிகள் மீது விருப்பம் அதிகம் என்று நான் சொன்னேன். ஆனால், அவர் அதற்குப் பின்னர் சொன்னவை எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தாங்கள்போராளி குடும்பம் என்றும், இதன் காரணமாகத் தாங்கள் பட்ட அவலம் இனி மேல் தங்கள் குடும்பத்தில் யாருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று போராட்டத்தின் வாடையே தெரியமலேயே பேரப்பிள்ளையைவளர்த்து வருவதாகவும், அவரின் முன்னால் போராட்டத்துடன் தொடர்புடைய எந்த விடயங்களையும் ஒரு போதும் பேசுவதில்லை என்றும் தெரிவித்தார். ஆனால் பேரப்பிள்ளை பேசும் பேச்சுகள் தங்களுக்குப் பயத்தை ஏற்படுத்துவதாகவும் ஒரு தடவை நெடுந்தீவுக்கு போன போது படகில் கடற்படையினரைப் பார்த்த பேரன், இவர்கள் ஏன் எங்களுடன் வருகிறார்கள். இவர்களைச் சுடுவதற்கு அல்லவா நாங்கள் நினைத்திருந்தோம் என்று கூறிய தாகவும் தெரிவித்தார். இப்படிப் பல சம்பவங்களைச் சொன்ன அவர் தனது பேரப்பிள்ளை தங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகி வீரச்சாவடைந்த ஒரு போராளியின் மறுபிறப்பாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நாங்கள் கிட்டு பூங்காவில் இந்த நிகழ்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். மாவீரர்கள் நினைவு நிகழ்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. போரில் பயந்து உறைந்த இந்தத் தலைமுறை இதற்கு மேல் நகரத் துணியாது என்று அரசாங்கம் கருதலாம். ஆனால் வருங்காலத் தலைமுறை அவ்வாறு இருக்காது. நான் குறிப்பிட்ட அம்மையார் சொன்ன மறுபிறப்பு நம்பிக்கை விவாதத்துக்கு உரியதாக இருக்கலாம் ஆனால் அரசாங்கம் எமக்கான சரியான அரசியல் தீர்வைத்தராமல் எங்களைத்தொடர்ந்தும் அடக்கி ஆள நினைத்தால்அடுத்த தலைமுறைகள் ஆயுதம் தூக்குவது தவிர்க்க இயலாது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தென்னைப்பயிர்ச்செய்கை சபையால் வழங்கப்படும் குறைந்த வட்டியுடனான இலகு கடன் திட்டம்

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின்ரால் வழுங்கப்படும் வட்டி மீளளிப்புடன் கூடிய இலகு கடன் திட்டத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 90 பயனாளிகள் சுமார்35 மில்லியன் ரூபா பணத்தினை இவ்வருடம் இலகு கடனாகப் பெற்று தமக்குச் சொந்தமான 280 ஏக்கர் காணிகளில் ஊடுபயிர்ச்செய்கையுடன் கூடிய தென்னைப்பயிர்ச் செய்கையினை ஆரம்பித்துள்ளார்கள். இவ்இலகு கடன்தொகையினைப் பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாள 33% இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் இக் கடன் திட்டத்தில் பங்கு பற்றி வட்டி மீளளிப்பினை பெறுபவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

அடுத்த வருடம் இக்கடன் திட்டத்தில் அதிகளவு தென்னைச் செய்கையாளர்கள் பங்கு பற்றிப் பயனடைய வேண்டும் என்பதற்காகவும் இக்கடன் திட்டத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரிற்கும் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும் இக் கட்டுரையானது மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.

இக் கடன் திட்டமானது இலங்கையில் 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் இத்திட்டமானது வட பகுதியில் யுத்தத்தின் பின்னர் தான் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, செலான்வங்கி, யூனியன் வங்கி, ஹற்றன் நாசனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய நிதி நிறுவனங்கள் பங்கு வகிக்கின்றன.

மற்றைய விவசாயக் கடன் திட்டங்கள்போலன்றி இக் கடன் திட்டமானது நிதிசார்ந்த உதவிகளைச் செய்வது மட்டுமல்லாமல் தொழிநுட்பம் சார் விரிவாக்க உதவிகளையும் வழங்குகிறது. அத்துடன் தென்னை பயிர் செய்யும் இடங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தென்னை பயிரிடுவோரின் தொழில் வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை கூட்டுதல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்போன்ற நோக்கங்களையும் உடையது.

இக்கடன் திட்டத்திற்கு பொருத்தமானவர்கள்

1) மேற்கூறப்பட்ட நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள்,

2) தென்னங்காணி உரிமையாளர்கள்(உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் உடையவர்கள்) அல்லது நீண்ட காலக் குத்தகையாளர்கள்,

3)மொத்தத் திட்டத்திற்கான செலவில் குறைந்தது 50%ஐயாவது செலவழிக்க தயாராக இருக்கக் கூடியவர்கள்.

4) நிதி நிறுவனங்களில் கடன்களை பெற்று அதை ஏற்கனவே மீளக்கட்டியவராக இருக்க வேண்டும்.

5) 0.5 ஏக்கர்(8பரப்பு) தொடக்கம் 50 ஏக்கர் வரையிலான மேட்டு நிலத்தை உடையவராக இருக்க வேண்டும்,

6) விண்ணப்பத்தாரி 53 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் அவரிற்கு 18 வயதிற்கு மேற்பட்ட பின்னுரித்தார் ஒருவர் கையொப்பமிட வேண்டும்.

7) வங்கிகளால் ஏற்றுக் கொள்ளக் கூடிய இருவர் பிணையாளராக இருக்க வேண்டும்.

8) ரூ.200,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு வங்கிகளால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அசையாத, அசையும் சொத்துக்களை வங்கி தன்னகத்தே வைத்திருக்கும் (அடைமானம்) நிபந்தனைக்கு சம்மதித்தவராக இருக்க வேண்டும்.

இக்கடன் திட்டமானது

✍ ஒரு ஏக்கரிற்கு (16பரப்பு) ஆகக் கூடிய தொகையாக ரூபா.125,000 படி மூன்று மில்லியன் வரை விண்ணப்பிக்கலாம்,

✍ ஆண்டு வட்டி 9%

✍ 3 வருடம் அல்லது 5 வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.

✍ வட்டியும் முதல் தொகையும், மாதாந்தமாக அல்லது காலாண்டிற்கு ஒரு முறை கட்டி முடிக்க வேண்டும்.

✍ வெற்றிகரமாகவும், நிதித்திட்டத்திற்கு ஏற்ற வகையிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்பவரிற்கு முதலாம் வருட வட்டித் தொகையானது காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்ப வற்றிற்கு அமைவாக 100% திருப்பிச் செலுத்தப்படும்.

✍ 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் - வருடங்களில் காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்ப வற்றிற்கு அமைவாக 50% வட்டி திருப்பிச் செலுத்தப்படும்.

✍ இவ்வாறு வட்டி மீளளிப்புச் செய்யப்படுவதால் வினைத்திறனான வட்டி வீதமானது 3.5% ஆகும்.

**எவ்வாறு இக்கடன் திட்டத்தை பெறுவது**

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலயத்திலோ அல்லது கமநல சேவைத் திணைக்களத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரின் அலுவலகத்திலோ உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்த வேண்டும். பின்னர் இப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவமானது உரிய வங்கிக்கிளையில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டு வங்கியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப்படிவத்தை பிராந்திய காரியாலத்திலோ அல்லது தென்னை அபிவிருத்தி உத்தி யோகத்தரிடமோ கையளிக்க வேண்டும். இக்கடனிற்காக விண்ணப்பிக்கப்பட்ட இடமானது பண்ணைத் திட்டமிடல் அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பதாரிக்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். இக்கடன் திட்டத்திற்குரிய சேவைக் கட்டணமானது விண்ணப்பதாரியால் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலத்தில் செலுத்தப்பட வேண்டும். (அதாவது கடன் பெற விண்ணப்பிக்கும் காணியின் அளவானது 5 - ஏக்கரிற்கு உட்பட்டிருப்பின் ரூபா.500 - உம் மேலதிகமான ஒவ்வொரு ஏக்கரிற்கும் ரூபா.50 - உம் செலுத்தப்பட வேண்டும்.) இதன் பின்னர் பண்ணை திட்டமிடல் அறிக்கை, நிதிக் கூற்று ,கடன் திட்ட அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் வங்கிக்கும் உரிய விண்ணப்பதாரிக்கும் அனுப்பப்படும். தேவையேற்படின் வங்கிகளால் விண்ணப்பதாரியின் இடமானது பரிசீலிக்கப்படும், இதன்போது விண்ணப்பதாரி உரிய விபரங்களை, உரிய வங்கிக்கு வழங்க வேண்டும். விண்ணப்பதாரியால் அவருடைய காணி சம்பந்தமான சகல ஆவணங்களின் மூலப்பிரதிகள் உரிய வங்கிக்கு பரிசீலனைக்காக வழங்க வேண்டும். விண்ணப்பதாரிக்கும், வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்படும். கடனானது தவணைகளாக (இரண்டு அல்லது மூன்று) விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

தென்னைப்பயிர்ச்செய்கை சபை நிதி நிறுவனங்களின் ஊடாகவே கடன்களை வழங்கி வருகின்றது. பிரதேச அபிவிருத்தி வங்கி, ஹற்றன் நாசனல் வங்கி இரண்டினூடாகவும் இக்கடன் திட்டத்தை குழுக்கடன்களாக பெறலாம். அதாவது மூவர் கொண்டகுழுதலா ரூ.125,000 ஐ கடனாகப் பெறலாம். தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இக்கடனினைப் பெற்று தங்களுடைய தென்னங்காணிகளை அபிவிருத்தி செய்து தங்களினதும் நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்து பயனடைய வேண்டும் என்பது தான் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் இலக்குகளில் ஒன்றாகும்.

இவ் இலகு க்டன் திட்டத்திற்குரிய பதிவுகள் தற்போது தென்னைப்பயிர்ச் செய்கை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. தாங்கள் மேலதிக தகவல்களினைப்பெற தென்னைப்பயிர்ச் செய்கை சபையின் நாவலர் வீதியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்துடனோ (021 222 6014) அல்லது கமநல சேவைத் திணைக் களத்தில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி உத்தி யோகத்தர்களையோ அல்லது அபிவிருத்தி உத்தி யோகத்தர் களையோ நாடவும்.

### இக்கடன் திட்டத்தின் வகைகளும் கொடுப்பனவுகளும்

| தொ. இல | முன்மொழிவு | நடவடிக்கை | ஒரு ஏக்கருக்குரிய கடன் தொகை |
|---|---|---|---|
| 1 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை புது நடுகை | புது நடுகை செய்தல், ஊடு பயிர் செய்தல். நீர், பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 2 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை மீள்நடுகை | காய்க்காத மரங்களை அகற்றி அவ்விடத்தில் புது மரங்களை நடுதல், ஊடுபயிர் வளர்ப்பு நீர் பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 3 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னங்காணி புனர்நிர்மானம் செய்தல் | ஊடுபயிர், மண் பாதுகாப்பு , நீர் பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 4 | தென்னங்காணி புனர்நிர்மானம் செய்தல் | நீர், பசளை முகாமைத்துவம் மூடுபடையிடல் மேலதிக மரங்களை அகற்றி புதுமரங்களை நடல், பீடை நோய் முகாமைத்துவம் | ரூ.50,000.00 |
| 5 | தென்னை புது நடுகை மாத்திரம் | புது நடுகை, மண், நீர் பாதுகாப்பு , பசளையிடல் | ரூ.25,000.00 |
| 6 | குழாய் நீர்ப்பாசனம் செய்தல் | கிணறு கட்டுதல், நீர் இறைக்கும் இயந்திரம், குழாய் நீர்ப்பாசனத்தொகுதி | ரூ.50,000.00 |
| 7 | மாடு , எருமை போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளுக்கிடையில் வளர்த்தல் | மாட்டுத்தொழுவம் அமைத்தல், விலங்குகள், உபகரணங்கள் வாங்குதல் (இதற்கு கட்டாயமாக ஒரு ஏக்கர் நிலமும் இரண்டு பசுக்களும் வளர்க்கபட வேண்டும்) | ரூ.150,000.00 |
| 8 | ஆடு, செம்மறி போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளுக்கிடையில் வளர்த்தல் | கொட்டில் அமைத்தல், விலங்குகள் , உபகரணங்கள் வாங்குதல் (இதற்கு கட்டாயம் 01 ஏக்கர் நிலமும் 01 கிடாய் 06 மறி வளர்க்க வேண்டும்) | ரூ.150,000.00 |

ஈஸ்வரன் சற்குணம்
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி
தென்னைப்பயிர்ச்செய்கை சபை
யாழ்ப்பாணம்

# ஜிந்தோட்டையில் இயல்பு வாழ்க்கை திரும்பும் வரையில் பாதுகாப்புப் படையினர் வெளியேற்றப்படமாட்டார்கள்



## சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிய சம்பவத்தை அடிப்படையாக கொண்டு காலி ஜிந்தோட்டை பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அங்கு மீண்டும் வழமை நிலையை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பிரதேசத்தில் வழமை நிலை ஏற்படும் வரையில் பாதுகாப்பு படையினர் வெளியேற்றப் பட மாட்டார்கள் என்று சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபி விருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

காலி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இடம் பெற்ற விசேட பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித் தார்.

இந்த பேச்சுவார்த்தையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபே வர்த்தன, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் கயந்த கருணாதிலக, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, காலி மாவட்ட செயலாளர் எஸ்.டி கொடிக்கார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பிரதேசத்தில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த உடைமைகளுக்கு நட்ட ஈடு வழங்கவும் பிரதேசத்தில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அமைதியை உறுதிப் படுத்துவதற்காக சமாதானக் குழுக்களும் அமைக்கப்பட்டுள் ளன.

சேதமடைந்த வீடுகளையும் நேரில் சென்று ஆய்வு செய்வதற்காக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர நேற்று முன்தினம் ஜிந்தோட்டை உட்பட பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் நேரடி விஜயத்தை மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார்.

அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமைகளை ஆராய்ந்ததோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர். (இ-7)

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல்வாதிகள் தீர்க்கின்றனரா?

## அமைச்சர் தயாசிறி கேள்வி


(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பு, அரசியல்வாதிகளிடம் உள்ள போதிலும் அதனை அரசியல்வாதிகள் தீர்க்கின்றனரா என அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

"2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் தமது கடமையை நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்த இராணுவத்தினர், அரசியல்வாதிகளின் பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு கோரினர். தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பு அரசியல்வாதிகளிடம் உள்ளது.

எனினும் அதனை அரசியல்வாதிகள் செய்கின்றனரா? என்பதே தற்போதைய கேள்வி. அவ்வாறான எந்த



ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படுவதில்லை. அதற்கு பதிலாக அந்தப் பிரச்சினையை மேலும் வலுவடைய செய்யும் வகையிலான வேலைத் திட்டங்களையே மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய நிலையில் ஜீவனோபாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இத்தகைய பிரசாரங்கள் மக்களை அழிவை நோக்கி இட்டுச்செல்லும் வகையில் அமைந்துள்ளது. இந்தப் பிரச்சினை குறித்து அனைவரும் புரிந்துணர்வுடன் செயலாற்றாத பட்சத்தில் இன்னுமொரு தலைமுறைக்கு இந்த தேசிய பிரச்சினை கடத்தப்படுகின்ற அதேவேளை, இந்த தேசிய பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு கிடைக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசிற்கு ஒத்துழைப்பு வழங்காத அதிகாரிகள் பதவி நீக்கப்படுவர்

## பிரதமர் எச்சரிக்கை!

(கொழும்பு)



அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்காத அதிகாரிகள் பதவி நீக்கப்படுவார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

கோப் குழுவின் தலைவர் மற்றும் வரவு- செலவுத் திட்டத் தலைவர் ஆகியோரைப் போன்று அனைத்துக் குழுக்களின் தலைவர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் திறைசேரியின் நடவடிக்கைகளை நாடாளுமன்றத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தி பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் சமுர்த்தி நிவாரணத்தை அதிகரித்துள்ளதுடன், அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தது போன்று எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)



மீசாலை வடக்கு ஜே/321 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நான்காம் கட்ட வரட்சி நிவாரண வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது. இவ்வரட்சி நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் மீசாலைப் பகுதியிலுள்ள குளங்கள், வீதிகள் மற்றும் கால்வாய்கள் துப்புரவாக்கல் பணியில் பெண்கள், முதியோர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் ஈடுபட்டு வருகின்றனர்.

(படம்:- மந்துவில் செய்தியாளர்)

# திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் விசேட திண்மக் கழிவகற்றல் வேலைத்திட்டத்தின் கீழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை திண்மக் கழிவகற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்தவகையில் இன்று திங்கட்கிழமை குருநகர் ஐந்துமாடிக் குடியிருப்பிலிருந்து கடற்கரை வீதி வரையிலான பிரதேசங்களிலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பாசையூர் மற்றும் அரியாலையிலும் புதன்கிழமை நல்லூர், வண்ணார்பண்ணை பகுதியிலும் வியாழக்கிழமை நாவாந்துறையிலும் வெள்ளிக்கிழமை பசார் பகுதிகளிலும் இத் திண்மக்கழிவகற்றல் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதால் மாநகர சபை பிரதேச எல்லைக்குட்ட பொதுமக்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10)

# நாட்டின் இறைமையை சவாலுக்குட்படுத்திய சர்வேஸ்வரன் விளக்கமளிக்க வேண்டும்

## எஸ்.பி.திஸாநாயக்க வலியுறுத்து





(கொழும்பு)

நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனத்தன்மை முதலானவற்றை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் வடமாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் செயற்பட்டதாக அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற பாடசாலை விழா ஒன்றில், கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் அங்கு தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அது குறித்து வெளியான காணொலி பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது, அவர் தேசிய கொடியை ஏற்றுவதை நிராகரிக்கவில்லை. அங்கிருந்த மற்றொரு அதிகாரியை தேசிய கொடியை ஏற்றுமாறு கூறியுள்ளார்.

ஆனால், அவரின் செயற்பாட்டை பார்க்கும்போது, நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனத்தன்மை முதலானவற்றை சவாலுக்கு உட்படுத்தும் மனநிலையுடன் இருக்கும் ஒருவர் என்பதுதான் இதனூடாக வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமது நிலைப்பாடு தொடர்பில் நாட்டுக்கு விளக்கமளிக்க அவருக்கு தாம் அழைப்பு விடுப்பதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

# கருணாநிதி அழைத்தால் அரசியலில் ஈடுபடுவேன்

## மு.க. அழகிரி தெரிவிப்பு



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதி அழைத்தால் மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடுவேன் என மு.க.அழகிரி சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சில ஆண்டுகளாக அரசியலில் இருந்து விலகியே இருந்த முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, அவ்வப்போது சென்னை வந்து தனது தந்தை கருணாநிதி மற்றும் தாயாரை சந்தித்து உடல் நலம் விசாரிப்பார்.

கடந்த மாதம் நடைபெற்ற குடும்ப திருமண விழாவில் பங்கேற்ற அழகிரி கருணாநிதியை சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

இந்நிலையில், நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மு.க.அழகிரி, தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல்நலத்துடன் உள்ளதாகவும் அவர் அழைத்தால் மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபட விரும்புவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# துரோகம் செய்கின்றனர்

## தினகரன் பகிரங்க குற்றச்சாட்டு



(சென்னை)

போயஸ்கார்டனைநினைவு இல்லமாக மாற்றுவோம் என்று கூறிய எடப்பாடியின் துரோக அரசு தொண்டர்களையும், மக்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகிறது என தினகரன் குற்றம்சாட்டியுள்ளார்.

ஜெயலலிதா வாழ்ந்த போயஸ்கார்டனில் வருமான வரித்துறைநடத்திய சோதனை குறித்து டி.டி.வி. தினகரன் டுவிட்டரில் கண்டனமும், குற்றச்சாட்டும் வெளியிட்டுள்ளார்.

போயஸ் கார்டனை நினைவு இல்லமாக மாற்றுவோம் என்று சொல்லி தொண்டர்களையும், மக்களையும் தொடர்ந்து ஏமாற்றி வரும் எடப்பாடியின் துரோக அரசு. இந்த துரோக செயலுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது?

அ.தி.மு.கவின் ஒன்றரை கோடி தொண்டர்களுக்கும் அவர்கள் இருவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும். தொண்டர்களையும், மக்களையும் தொடர்ந்து ஏமாற்றிவரும் எடப்பாடியின் துரோக அரசு. இந்த துரோக செயலுக்கு என்ன பதில் சொல்லப் போகிறது?

போயஸ் கார்டனில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்துவதற்கு காரணம் எதுவாக இருந்தாலும், இது அம்மாவின் ஆன்மாவுக்கு செய்யப்படும் துரோகம். இந்த துரோகத்தின் பின்னணியில் எடப்பாடியும், பன்னீர்செல்வமும்தான் இருக்கிறார்கள்.

தங்களின் ஆட்சியை, பதவியை காப்பாற்றிக் கொள்ள கழகத்தை அடகு வைத்த எடப்பாடியும் பன்னீரும் இன்னும் எத்தனை துரோகங்களை செய்யக் காத்திருக்கிறார்கள் என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-7)

# வருமானவரித் துறையின் சோதனை தனி நபருக்கு எதிரானது அல்ல

## பொன். இராதாகிருஷ்ணன் விளக்கம்



(சென்னை)

வருமான வரித்துறையினர் நடத்தும் சோதனை எந்த தனி நபருக்கும் எதிரானது அல்ல என்று மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் விளக்கமளித்துள்ளார்.

சசிகலா குடும்பத்தினர் மீது நடத்தப்படும் வருமான வரி சோதனையின் தொடர்ச்சியாக ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் இல்லத்திலும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர்.

இதற்கு அ.தி.மு.க. மட்டுமன்றி மேலும் சில கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதுபற்றி மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் கூறுகையில்,

நாளை நம்மீதும் சோதனை நடத்தப்படுமோ என்ற பயம் தான். மடியில் கனம் இருப்பவர்கள், தாக்கும் நாளை வருமான வரித்துறையினர் சோதனை வரலாம் என்ற அச்சம் கொண்டவர்கள், இருட்டறையில் தனி உலகம் படைத்து எதையும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாதவர்கள் விமர்சிப்பார்கள். அது பயத்தால் வெளிவரும் வார்த்தைகள்.

வருமான வரித்துறை என்பது தனி அதிகாரம் கொண்ட அமைப்பு. அது எங்கே, எப்போது சோதனை போடுவது என்பதை அவர்களுக்கு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் முடிவு செய்யும்.

அப்போது ஏன் நடத்தவில்லை? இப்போது ஏன் நடத்துகிறார்கள்? என்று எப்படி கேள்வி எழுப்ப முடியும்?.

தகவல்களை சேகரிக்க, ஆதாரங்களை திரட்ட எவ்வளவு கால அவகாசம் தேவைப்படும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

வருமான வரித்துறையினர் நடத்தும் சோதனை எந்த தனி நபருக்கும் எதிரானது அல்ல. தமிழ்நாட்டுக்கு சாதகமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜெயலலிதா இல்லத்தில் இடம்பெற்ற சோதனை கவலைக்குரியது - முதல்வர்

(சென்னை)

ஜெயலலிதாவின் இல்லத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியிருப்பது. வேதனைக்குரிய விடயமாகும் என, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.



நேற்று மதுரை விமான நிலையத்தில் வைத்து, ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கின்றபோதே முதல்வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், போயஸ் கார்டன் இல்லத்தில், ஜெயலலிதாவின் அறையில் சோதனை நடத்தப்பட வில்லை. சின்னம்மா வீடுகளில் நடத்தப்பட்ட சோதனை யாரால் நடத்தப்பட்டது என, எல்லோருக்குமே தெரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிம்பாவே ஜ… இரா[ணு]வ ந…

(ஹரரே)

சிம்பாவேயில் 37 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்து வரும் முகாபேவுக்கு எதிராக இராணுவம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு அந்நாட்டு மக்கள் பெருவாரியானோர் ஆதரவளித்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் ராபர்ட் முகாபே 1980-ம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். அதிகாரத்தை தனது வசம் கொண்டு வர முயற்சிப்பதாக கூறி அந்நாட்டு துணை ஜனாதிபதி எமர்சன் நாங்காவாவை முகாபே பதவி நீக்கம் செய்தார்.

இதனால், ஆளும் ஷானு - பி.எப் கட்சியில் பிளவு ஏற்பட்டது. இராணுவ தலைமை தளபதி ஜெனரல் சிவெங்கா, நீக்கப்பட்ட துணை ஜனாதிபதி நாங்காவாவுக்கு ஆதரவாக நின்றார். இதனால், அந்நாட்டு அரசியலில் குழப்பநிலை ஏற்பட்டது.

# முதல்வர் நாற்காலியில் ஸ்டாலின் அமர வேண்டும்

## திருநாவுக்கரசர் விருப்பம்



(கோவை)

தமிழகத்தில் கூட்டணிக்கு தலைமையேற்று முதலமைச்சர் நாற்காலியில் ஸ்டாலின் அமர வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற இந்திராகாந்தி நூற்றாண்டு விழா நிறைவு பொதுக்கூட்டத்துக்கு தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் திருநாவுக்கரசர் தலைமை தாங்கி உரையாற்றும்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது நாட்டில் மோடி தலைமையில் மத்தியில் மதவாத ஆட்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

பண மதிப்பிழப்பு நடவடிக்கையில் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டுவருவோம் என்று மோடி கூறினார்.

ஆனால் ஏழை மக்களின் சுருக்கு பையில் போட்ட பணத்தைத்தான் வங்கியில் போட வைத்தார். பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் நாட்டுக்கு ரூ.3 இலட்சம் கோடி நட்டம் ஏற்பட்டு இருப்பதாக பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

மோடிக்கு எதிராக இப்போது அந்த கட்சியின் தலைவர்கள் திரும்பி இருக்கிறார்கள். அத்வானி பேச முடியாமல் அமைதியாக இருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜனதாவில் மோடியின் செல்வாக்கு குறைந்து வருகிறது. உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தை கூட, எதிர்காலத்தில் பிரதமர் வேட்பாளராக ஆர்.எஸ்.எஸ். அறிவிக்கக்கூடும்.

அந்தளவுக்கு மோடிக்கு மக்கள் மத்தியிலும், கட்சியிலும் எதிர்ப்பு வலுத்து வருகிறது. குஜராத் தேர்தலில் மக்கள், காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்பளித்து திருப்புமுனையை ஏற்படுத்துவார்கள்.

தமிழ்நாட்டில் இப்போது முதுகெலும்பற்ற ஆட்சி நடக்கிறது. தமிழக அரசு கோமா நிலையில் செயலற்ற அரசாக இருக்கிறது.

ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தில் வருமான வரித்துறையினர் சோதனை செய்துள்ளனர்.

ஆனால் இது குறித்து எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் வாய் மூடி மௌனிகளாக உள்ளனர். ஜெயலலிதா என்ற குலதெய்வம் குடியிருந்த வீடு என்று கூறிய அவர்கள், இந்த சோதனையை வாய்மூடி வேடிக்கை பார்ப்பதன் காரணம் என்ன?


வருமான வரிசோதனையில் இரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். அந்த இரகசியங்களை கசிய விடுங்கள் என கேட்டுக் கொள்கிறோம்.

மத்திய அரசின் கைப்பாவையாக மாநில அரசு திகழ்கிறது. எனவே மத்தியில் உள்ள மதவாத பாரதிய ஜனதா ஆட்சியையும், மாநிலத்தில் உள்ள ஊழல் ஆட்சியையும் தூக்கி எறிய கைகோர்ப்போம்.

மோடி திரும்பவும் வந்தால் தேச

# வெளிநாடு

## மீண்டும் தேர்தலில் போட்டியிடவும் ஹிலாரிக்கு ட்ரம்ப் அழைப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஹிலாரி கிளின்டனை போட்டியிட முயற்சிக்குமாறு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், நேற்று முனதினம் விடுத்துள்ள டுவிட்டர் செய்தியிலேயே, இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் போட்டியிட்ட ஹிலாரி கிளின்டன் பாரியளவில் தோல்வியைத் தழுவியுள்ளார்.

. மேலும், தேர்தலில் போட்டியிட முயற்சிப்பதை அவரால் நிறுத்த முடியாதென்பதுடன், அவரால் எமது குடியரசுக் கட்சிக்கு நன்மையே கிடைத்துள்ளது' என்றார்.

எனவே, அமெரிக்காவில் இன்னும் மூன்று வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட முயற்சிக்குமாறு அவருக்கு அழைப்பு விடுக்கின்றேன்' எனவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## அணுவாயுதப் பிரச்சினைக்கு தீர்வு

## வடகொரியாவிடமிருந்து சமிக்ஞை எதுவும் இல்லை

(சியோல்)

வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்காவும் தென்கொரியாவும் இணங்கியுள்ளபோதிலும், இதற்கான சமிக்ஞை வடகொரியாவிடமிருந்து கிடைக்கவில்லையென, தென்கொரியாவின் விசேட பிரதிநிதி லீ டோ ஹூன் (Lee Do hoon) தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுக்கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஜோசப் ஜுன்னை (JOSEPH YUN), சமாதானம்மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான தென்கொரியாவின் விசேட தூதுவர் லீ டோ ஹூன் (Lee Do hoon) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தென்கொரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தபோது, 'வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை நிலை நாட்டுவதற்கு தென்கொரியாவும் அமெரிக்காவும் இணங்கியுள்ளன.


இருந்தபோதிலும், வடகொரியாவிடமிருந்து இதற்கான சமிக்ஞை கிடைக்கவில்லை என்றார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வடகொரியாவிடமிருந்து எந்தவித சமிக்ஞையும் கிடைக்காமையால், அதன் நோக்கங்களைக் கண்டறிவது கடினமாகும்' எனவும் அவர் கூறியுள்ளார்.

வடகொரியாவானது அதன் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைத் திட்டங்களைக் கைவிட வேண்டுமென்று அமெரிக்கா, தென் கொரியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் அழுத்தம் பிரயோகித்து வருகின்றன.

இருப்பினும், வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை கண்டு கொள்ளப் போவதில்லையெனத் தெரிவித்துள்ள வடகொரியா, அணு வாயுதத் திட்டங்களை ஒருபோதும் கைவிடமாட்டாதெனவும் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஜனாதிபதி முகாபேவுக்கு எதிரான நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவு




இதனையடுத்து, கடந்த 15 ஆம் திகதி தலைநகர் ஹரரேவை ராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன. அதிகளவிலான ராணுவத்தினர் ஆயுதங்களுடன் தலைநகரை சுற்றி குவிக்கப்பட்டனர். ஆட்சி அதிகாரத்தை ராணுவம் கைப்பற்றியதாக செய்திகள் வெளியாகின.



ஜனாதிபதி முகாபே மற்றும் அவரது குடும்பத்தினர் ராணுவத்தின் கண்காணிப்பில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஜனாதிபதி முகாபேவுக்கு எதிராக ராணுவம் கிளர்ந்துள்ளதற்கு அந்நாட்டு மக்கள் ஆதரவு அளித்துள்ளனர். முகாபே வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் கவனம் செலுத்தவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே திரண்ட ஆயிரக் கணக்கானோர் முகாபேவை பதவி யிலிருந்து நீக்க வேண்டும் என கோஷங் களை எழுப்பினர்.

இதற்கிடையே, ஜனாதிபதி முகாபேவை பதவி நீக்கம் செய்வது குறித்து மாகாண ஆளுநர்கள் அவசர கூட்டம் நடத்த உள்ளனர். இதில், முகாபேக்கு எதிராக அனைவரும் அணி திரளும் பட்சத்தில் அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

த்தை கடவுளால் கூட காப்பாற்ற முடியாது. கோவையில் பொதுக்கூட்டமாக நடைபெறும் இந்த தர்மயுத்தம் மத சார்பற்ற கூட்டணிக்கு அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சியாக இருக்கும்.

வரும் பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ராகுல் காந்தி பிரதமராவார்.

தமிழகத்தில் கூட்டணிக்கு தலைமையேற்று முதலமைச்சர் நாற்காலியில் ஸ்டாலின் அமர வேண்டும். இதற்காக காங்கிரஸ் தோளோடு தோள் நிற்கும்.


பிரதமர் மோடி கலைஞரை பார்க்காமல் சென்றிருந்தால் தான் தவறு. அவர் ஏற்கனவே ஒரு தவறு செய்து விட்டார். உடல்நிலை பாதிக்கப்பட்டு ஜெயலலிதா 75 நாட்கள் வைத்தியசாலையில் இருந்த போது அவரை பார்க்க வராதது மோடி செய்த தவறு.

எனவே மோடி, கலைஞரை பார்த்ததால் தமிழகத்தில் அதிசயம் எதுவும் நடக்காது. அவ்வாறு நினைத்தால் ஏமாற போவது மோடி தான். தமிழகத்தில் ஒரு நாளும் பா.ஜனதா காலூன்ற முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வீட்டில் ஏற்பட்ட தீ சீனாவில் 19 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் டாக்ஸிங் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 8 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



சீனா தலைநகர் பீஜிங் அருகே டாக்ஸிங் மாவட்டத்தில் இருக்கும் ஜிங்ஜியான் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் மாலை தீ விபத்து ஏற்பட்டது. தீயணைப்பு வாகனங்கள் வருவதற்கு தாமதமானதன் காரணமாக தீ வேகமாகப் பரவியது.

6 மணி நேரம் தாமதமாக வந்த மீட்புக்குழுவினர் தீயை போராடி அணைத்தனர்.

இந்தக் கோர விபத்தில் 19 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்து குறித்து விசாரித்து வருவதாகவும் சந்தேகத்தின் பெயரில் சிலரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## உயிருடன் உள்ளவர்களுக்கும் தலைமாற்று சத்திரசிகிச்சை

(ரோம்)

சடலத்துக்கு நடந்த தலைமாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்துள்ளது. இதே தொழில் நுட்பத்துடன் உயிருடன் வாழும் மனிதர்களுக்கு தலை மாற்று சத்திர சிகிச்சை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு உடல் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகள் நடைபெறுவது சகஜமாகி விட்டன. அதன் அடிப்படையில் தலைமாற்று சத்திர சிகிச்சை நடத்தும் முயற்சியில் வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த வெலேரி ஸ்பிரிதி நோவ் என்பவருக்கு தலைமாற்று சத்திரசிகிச்சை நடத்தப் போவதாக இத்தாலியைச் சேர்ந்த வைத்தியர் செர்ஜியோ கனோவெரா அறிவித்தார். இதன்மூலம் முதன் முறையாக தலைமாற்று சத்திரசிகிச்சை நடக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கான சோதனை முயற்சிகளில் கனோவெரா ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில் தற்போது ஒரு சடலத்துக்கு தலைமாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. வைத்தியர் செர்ஜியோ கனோவெரோ தலைமையிலான குழுவினர் இந்த சத்திர சிகிச்சையை செய்துள்ளனர்.

சுமார் 18 மணி நேரம் இந்த சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. அப்போது புது விதமான தொழில்நுட்பம் பின்பற்றப்பட்டது. தண்டுவடம், நரம்புகள் மற்றும் இரத்த நாளங்கள் அனைத்தும் அதி நவீன தொழில் நுட்பத்துடன் தலையுடன் பொருத்தப்பட்டது.

இச்சோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதே தொழில் நுட்பத்துடன் உயிருடன்வாழும் மனிதர்களுக்கு தலை மாற்று சத்திரசிகிச்சை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# பிரதமரின் சிறப்புரிமையை உறுதிப்படுத்த வேண்டும்!

## ஆணைக்குழுவுக்கு ரணில் நிபந்தனை



(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளிப்பதற்கு, பிரதமருக்குரிய சிறப்புரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து, நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விசாரணையின்போது சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரியவே பிரதமரிடம் கேள்விகளை எழுப்புவார் என்றும் தெரியவருகின்றது.

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இன்று 20ஆம் திகதி ஆஜராகுமாறு பிரதமருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. பிணை முறி மோசடியில் பிரதமருக்கும் தொடர்பிருக்கின்றது என்றும் அவரிடமும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பொது எதிரணி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில், விசாரணைக்கு முகங்கொடுப்பதற்குத் தான் தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்துள்ளதால் இன்று 20ஆம் திகதி அவர் ஆணைக்குழுவில் ஆஜராகுவார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரசியலில் பிரதமர் பதவியை வகித்த ஒருவர் இதுவரை, விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகியதில்லை. அழைப்பாணைகள் விடுக்கப்பட்டாலும் பிரதமர் சார்பில் அவரது சட்டத்தரணியே ஆஜராகும் நிலை இருந்து வந்தது. எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் ஆஜராகுவதால், அவரின் சிறப்புரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும் எனக்கோரப்பட்டுள்ளது.(இ-7)

# மகிந்தவிற்கு 72 ஆவது பிறந்த நாள்




(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 72ஆவது பிறந்த நாளை நேற்று முன்தினம் கேக் வெட்டி குடும்பத்தாருடன் இணைந்து தனது அலுவலகத்தில் கொண்டாடினார். (இ-7)

# பிக்குவின் ஆதரவுடன் முஸ்லிம்கள் மீது தாக்குதல்







(கொழும்பு)

காலி கிந்தொட்டயில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, பல வீடுகளும், வர்த்தக நிலையங்களும், வாகனங்களும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

வெளியிடத்தில் இருந்து வந்த சிங்களவர்களே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

"வெள்ளிக்கிழமை இரவு வந்த வெளியிடத்தை சேர்ந்த குழுவினரே முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டதாக அங்கு சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

"இந்த வன்முறைகளின் போது அந்த பகுதியிலுள்ள 50க்கும் மேற்பட்ட வீடுகளும் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டுள்ளன.

அந்த பகுதியிலுள்ள பௌத்த விகாரை ஒன்றுக்கு அருகிலேயே இந்த வன்முறைகளை மேற் கொண்ட குழுவினர் தங்கியிருந்தனர்.

பௌத்த பிக்கு ஒருவரின் பின்புலத்திலே இந்த சம்பவங்கள் இடம் பெறுவதாக அந்த பகுதியிலுள்ள முஸ்லிம்கள் தன்னிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, இதற்கு முன்னர் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்குத் தூபமிட்டார் என்று குற்றம்சாட்டப்பட்ட பொது பல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர், இந்த வன்முறைகள், மற்றும் பதற்றத்தை தணிக்கும் நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொரளையில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி!



(கொழும்பு)

புஞ்சி பொரளை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்றில் ஒருவர் பலியாகியுள்ளார்.

40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எனினும் பலியானவர் அடையாளம் காணப்படவில்லை அத்துடன் சம்பவத்துக்கான காரணம் குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.

பொரளை பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

## இன்று ஒரு தகவல்

### யாரிடம் முறையிடுவது?

மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று ஒரு வாரியம் உண்டு. இது,ஆலைக் கழிவுகளை எப்படி வெளியே அனுப்பாமல் சூழ்நிலையைப் பாதிக்காதபடி அக்கழிவுகளை அப்புறப்படுத்துவது என்று தொழிற்சாலைகளுக்கு அறிவுறுத்துகிறது. அதன்படி செய்தால் தொழிற்சாலைக்குள்ளேயே அந்தக் கூடுதலான கழிவுக்குத் தீர்வு கண்டுவிடலாம்.

என்ன லேனா, தலைப்பிலிருந்து ரொம்பவும் விலகிப் போகிறீர்களே என்கிறீர்களா? தொடர்புடைய விடயம்தான் சொல்கிறேன்.

குடும்ப உறுப்பினர்களைப் பற்றி, உறவினர் - நண்பர்களைப் பற்றி, உடன் பணிபுரிகிறவர்கள் பற்றியெல்லாம் நமக்கு ஆயிரமாயிரம் மனக்குறைகள். யாரும் கேட்கத் தயாராக இருந்தால் மணிக்கணக்கில் பேசுவதற்குச் சரக்கு வைத்திருக்கிறோம். ஆனால் கேட்பதற்கு எவரும் தயாராக இல்லை என்பதால் சும்மா இருக்கிறோம்.

ஆனாலும், எப்படியாவது பிறரைப் பற்றிய நம் மனக்குறைகளை வெளியிட நான்கு பேரையாவது தயார் செய்துவிடுகிறோம். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைவிட நாம் சொல்வதைக் கேட்டுக் கொள்கிறார்களா? நமக்குப் பரிந்து பேசுகிறார்களா? நாம் செய்ததெல்லாம் சரி,எதிராளி செய்ததெல்லாம் தவறு என்று ஜிங்சக் ( ஜால்ரா) போடுகிறார்களா என்பதைப் பற்றியே அதிக அக்கறை காட்டுகிறோம். இது நாம் காலம் காலமாகச் செய்து கொண்டிருக்கும் இமாலயத் தவறு.

நம் மனக்குறை வெளியிடும் போதெல்லாம் அவற்றைக் கேட்டுக்கொள்ளும் நபர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதில் நாம் இனியாவது கவனம் செலுத்தவேண்டும்.

நம் புலம்பல்களைக் கேட்டுக் கொள்கிறவர்கள் பெரும்பாலும் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? உங்களுக்கு இது சற்றே அதிர்ச்சியாக இருக்கும்.

இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் நாம் அந்தப் பக்கம் போனதும் நாம் சொன்ன விடயங்களைக் கேட்டு ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரிப்பவர்களே இன்னும் ஒருபடி மேலே போய் இவனுக்கு / இவளுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்! என்று சந்தோசப்படுவர்களே. இதையும் ஒரு கட்டம் கடந்து இந்தப் பிரச்சினை இன்னும் பெரிதாக வேண்டுமடா ஆண்டவா! என்று வேண்டிக் கொள்பவர்கள்கூட உண்டு.

நாம் யாரிடம் புலம்பித் தீர்க்கிறோமோ, அவர்கள் நம்முடைய பிரச்சினைகளை வெளியே பரப்புபவர்களாகவும் அமைந்து விடுகிறார்கள் என்பதே உண்மை.

இன்னோர் ரகத்தினரும் உண்டு. இவர்கள் நம்மையும் தூண்டிவிட்டு, எதிராளியையும் தூண்டிவிட்டுச் சண்டையடித்துக் கொள்ளும்படி செய்துவிடுவார்கள்

இனி, நாம் நம் மனக் குறைகளை வெளியில் சொல்லியே புலம்பிக்கொண்டிரு க்காமல், மாசுக் கட்டுப்பாட்டு வாரியயோசனைப்படி தொழிற்சாலைக்குள்ளேயே தீர்வு காண்பது போல் நமக்குள்ளே தீர்வு காணமுயல்வோம்.

ஒரு மனக்குறை நிகழ்ந்துவிட்டால் அதே எதிராளி செய்த ஒரு சிறு நன்மையை நினைத்துக் கொண்டு சமாதனம் அடைவோம்.

சொல்லித்தான் தீருவேன் என்று அடம் பிடிப்பவர்கள்,நம்மைச் சமாதானம் செய்பவர்கள் அல்லது நமக்கு நல்ல தீர்வை சொல்லுகிறவர்களிடம் மட்டும் சொல்லி வைப்பது நல்லது.

**லேனா தமிழ்வாணன்**

# பாடசாலைகளை ஒழுங்குபடுத்த கண்காணிப்பு குழு

## கல்வி அமைச்சு நடவடிக்கை



(கொழும்பு)

கண்காணிப்பு குழுவொன்றின் மூலமாக எதிர்வரும் ஆண்டு தொடக்கத்திலிருந்து பாடசாலைகளை ஒழுங்குப்படுத்தப் போவதாக, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன், பரீட்சைகள் திணைக்களத்திலும், மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பாதாள உலகக் கோஷ்டியின் நடவடிக்கைகளை முற்றாக முடக்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சமகால நல்லாட்சி அரசாங்கத்தினால் பொலிஸ் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த கொள்கையின் காரணமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்தார்.



நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தேசியகொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சட்டம் ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்களுக்கான வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சாகல ரட்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

பாதாள உலகக் கோஷ்டியின் நடவடிக்கைகளை முற்றாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் உலகத்துடன் தொடர்புகளை விரிவுபடுத்தக்கூடிய வகையில் திட்டமிட்ட வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஊழல் மோசடியுடன் கூடிய பொருளாதாரம் நிலவிய நாடொன்றை அவற்றிலிருந்து மீட்டெடுத்து அபிவிருத்தி செய்வதற்கு தற்போதைய அரசாங்கத்தினால் முடிந்துள்ளது. சமீப காலத்தில் பொலிஸ் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சிறந்த கொள்கையின் காரணமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

இதனூடாக சுதந்திரமாக செயற்படக் கூடிய பொலிஸை உருவாக்கக்கூடியதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் குற்றச் செயல்கள் குறைந்துள்ளன. தற்பொழுது குற்றச்செயல்கள் தொடர்பில் செய்திகளை வெளியிடுவது அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

பொதுமக்களின் பணத்தை முறைகேடாக பயன்படுத் திய நபர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப் படுத் தப் படுகிறது. நிதி குற்றச் செயல் விசாரணை பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை இதன் நோக்கமாகும். அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி போதைப் பொருள் செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட காலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என அமைச்சர் சாகல ரட்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலவரம் ஏற்பட்ட இடத்தில் பிரதமர் ரணில் ஆய்வு

(கொழும்பு)

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட காலி, ஜிந்தோட்டை பிரதேசத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்துள்ளார்.



கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் பொதுபல சேனா மற்றும் மகிந்த ஆதரவு அணி பௌத்த பிக்குகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கலவரம் காரணமாக முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது.

அத்துடன் இரண்டு பள்ளிவாசல்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன், பெற்றோல் குண்டு வீச்சுகளும் இடம் பெற்றன.

இந்த நிலையில் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கலவரத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரில் சென்று மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரதமரின் இந்த விஜயத்தின் போது அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, சாகல ரத்நாயக்க ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அமைச்சர்



(கொழும்பு)

ஆசியாவிற்கான விஜயத்தின் ஒரு அங்கமாக, ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஷெயிக் அப்துல்லா பின் செய்ட் அல் நஹ்யான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்த இவர், ஐக்கிய அரபு இராச்சியத்தின் அரச குடும்பத்து அங்கத்தவராவார்.

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்திக்கொள்ள ஐக்கிய அரபு அமீரகம் முணைப்புடன் இருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்தினம சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்கும் இடையிலான உயர் மட்ட பரஸ்பர தொடர்பை மேம்படுத்துவது குறித்து வலியுறுத்தியுள்ளார்.

அரபு இராச்சியத்தின் அமைச்சர் தலைமையில் 30 பேர் கொண்ட தூதுக்குழுவினர் விசேட விமானத்தின் மூலம் இலங்கை வந்துள்ளனர். (இ-7)

# ஊரடங்கு சட்டம் நீக்கம் எஸ்.டி.எப். இராணுவம் குவிப்பு

(கொழும்பு)

காலி பொலிஸ் பிரிவின் ஏழு கிராம சேவகர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

வெலிபிடிமோதர, மஹுபுகல, ரக்வத்தை, கிங்தொட கிழக்கு, கிங்தொட மேற்கு, பியதிகம மற்றும் குருந்துவத்தை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், அந்தப் பகுதிகளில் பொலிஸாருடன் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பில் கைது செய்யப்பட்ட 19 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் மு.கா.தனித்து போட்டியிட தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் தனித்துப் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

அக் கட்சியின் செயலாளர் நிஷாம் காரியப்பர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட முன்னதாகவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும், விரைவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என நிஷாம் காரியப்பர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகரிலுள்ள கழிவு வாய்க்கால்களிலிருந்து பெருமளவான நுளம்புகள் வெளி யேறுவதாக வர்த்தகர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில்பெய்த மழையினைத் தொடர்ந்து நகரில் காணப்படும் கழிவுநீர் வாய்க்கால்களில் நுளம்புகள் பெருகி அவை வாய்க்காலின் மூடிகள் வழியாக வெளியேறி வருகின்றன.

எனவே இது குறித்து சுகாதாரப் பகுதியினரும், பிரதேச சபையினரும் கவனம் எடுத்து கழிவு வாய்க்கால்களைத் துப்புரவு செய்து நுளம்புப் பெருக்கத்தைத் துப்புரவு செய்து நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)



143 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடமாகாண அஞ்சல் தின நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி க. கடகசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் , பிரதம விருந்தினராக அஞ்சல்மா அதிபதி டி.சி.பி.ஆர் அபயரத்ன, கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் உட்பட அஞ்சல் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: சோபிகா)

# தமிழருக்கு உரிமைகளை வழங்கியிருந்தால் வடக்கில் யுத்தம் ஏற்பட்டிருக்காது!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தால் வடக்கில் யுத்தம் ஒன்று ஏற்பட்டு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இன்னும் இத்தகைய செயற்பாடுகளுக்கு வாய்ப்புக்களை உருவாக்குகின்ற தரப்பினர் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**



கம்பஹாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு அரசியல்வாதிகளால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

உயரிய பௌத்த தர்மத்தை பின்பற்றுகின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் 15 சதவீதமாக மாத்திரம் வாழும் சிறுபான்மை மக்களான தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது இருந்தது ஏன்? எனவும் கேள்வியெழுப்பினார். மேலும் பெரும்பான்மையான மக்கள் இத்தகைய ஒடுக்குமுறைகளை விரும்புவதில்லை எனவும் தெரிவித்தார். (இ-7)

## தமிழ் இனவாதம் வலிமை பெறும்போது சிங்கள இனவாதமும் வலிமைபெறும்

### ஜே.வி.பியின் தலைவர் கூறுகிறார்



(கொழும்பு)

தமிழ் இனவாதம் வலிமை பெறும் போது அதற்கெதிராக சிங்கள இனவாதமும் வலிமைபெறும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய கொடியை ஏற்றுவதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் மறுப்பு தெரிவித்துள்ளார். இது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடா? என்பதை தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்திற்கு கூறவேண்டும். இலங்கையின் தேசியக் கொடி தொடர்பில் பல்வேறு தர்க்க ரீதியான விவாதங்கள் இருக்கலாம்.

'எனினும் அரசியல் அமைப்பின் பிரகாரம் அனைவரும் தேசியக் கொடிக்கு மரியாதை செலுத்துவது கட்டாயமானது. வடக்கு மாகாண அமைச்சர் சர்வேஸ்வரன் தேசியக் கொடியை புறக்கணித்தமை வெளிப்படையாக இனவாதத்தை சுட்டி நிற்கின்றது.

இந்த இனவாதம் வடக்கில் இருந்து உருவாகின்றதா? அல்லது தெற்கில் இருந்து உருவாகின்றதா? என்பது அவசியமானதல்ல. இனவாதம் என்பது மேலும் இனவாதத்தை போசிப்பதாகவே அமைகின்றது. தமிழ்இனவாதம் வலிமை பெறுகின்ற போது, அதற்கு எதிராக சிங்கள இனவாதமும் வலிமைபெறும்.

எனவே தேசிய நல்லிணக்கத்தின் மூலமே இனவாத்தை தோற்கடிக்க முடியும். அத்துடன் இனவாதத்தை தோற்கடிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், இனவாதத்தை வலியுறுத்தி அரசியல் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாடு பிளவுபடுவதாக கூறி பொய்ப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கிலும் இனவாதத்தை வலியுறுத்தும் தரப்புக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் செயற்பட்டு வருகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சின்னையாவிற்கு சேவை நீடிப்பு வழங்காமை வருத்தமளிக்கிறது

### நாடாளுமன்றில் டக்ளஸ்



(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி ட்ரவிஸ் சின்னையாவிற்கு சேவை நீடிப்பு வழங்கப்படாமை வருத்தமளிப்பதாக ஈ.பி.டி.பியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழரான சின்னையாவிற்கு கடற்படைத் தளபதி பதவி வழங்கப்பட்டமை நல்லிணக்கத்திற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்திருந்தது என அவர் தெரிவித்தார்.

எனினும் குறுகிய காலத்திற்குள் அவர் பதவியிலிருந்து ஓய்வுறுத்தப்பட்டமை வருத்தமளிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## நொச்சி மரம்



நொச்சி

திணை- தாவரம்
வரிசை- **Lamiales**
குடும்பம் - **Lamiaceae**
தாவரவியற் பெயர் - **Vitexnegundo**
மறுபெயர்கள்- இந்திரசூரியம், நித்தம், சிந்துவாரம்



கரு நொச்சி

நொச்சி எனும் மரமானது வெண்ணொச்சி, கருநொச்சி என இரு வகையாக உள்ளன. வெண்ணொச்சி மரமாக வளரும். இதுஒரு இருவித்திலை வகை பூக்கும் தாவரமாகும். நொச்சி இலைகள் கை வடிவமான 3 அல்லது 5 கூட்டிலைகளுடன் கூடியவை. தலைகீழ் ஈட்டிவடிவமானவை. மணமுள்ளவை. நொச்சி இலை கீழ்ப்புறம் சாம்பல் நிறமான உரோமப் பூச்சு காணப்படும். எல்லா மாவட்டங்களிலும் வேலிகள், தரிசு நிலங்களிலும் இயற்கையாக வளர்கின்றது. மலைப் பகுதிகளில் வளர்பவை அதிகமான உயரமாக காணப்படும்.

நொச்சி முழுத்தாவரமும் கைப்பு. துவர்ப்பு மற்றும் காரச் சுவைகள் கொண்டது. வெப்பத்தன்மையானது வெண்ணொச்சி ஆற்றோரங்களில் வளரும் தாவரமாகும். வெண்ணொச்சியை வெள்ளாடு கூட ஓரிருவாய்தான் கடிக்கும்.

இத்தாவர மலர்கள் கொத்தாக நுனியில் அல்லது இலைக் கோணத்தில் அமைந்தவை. கருஞ்சிவப்பு அல்லது செங்கருநீலமானவை.

நொச்சி இலை, பூ, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயன்கள் கொண்டவை. இலை உடல் அசதியைத் தணிக்கும், சிறுநீரைப் பெருக்கும், காய்ச்சலைப் போக்கும், ஜலதோசத்ததைக் கட்டுப்படுத்தும், வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்.

நொச்சிப்பூ குளிர்ச்சி உண்டாக்கும், துவர்ப்புச் சுவையைத் தூண்டும். நொச்சி வேர் காய்ச்சலை கட்டுப்படுத்தும்.

வெண்ணொச்சி நார்கள் வேலி, தட்டுக்கூடை என்பன பின்னவும் பயன்படும்.

கருநொச்சி நீலநொச்சி என அழைக்கப்படுகின்றது. இது நொச்சி தாவரத்தைப் போன்று இருந்தாலும் இலைகள் மற்றும் தண்டுகள் நீல நிறமானவை. இத்தாவரம் காடுமேடெல்லாம் வளரும்.

கருநொச்சியை மாடுகள் மேயும். மேலும் நொச்சியின் மருத்துவப் பயன்கள் அனைத்தும் இதற்கும் உண்டு. கருநொச்சி மூலிகையாகவும் வயல்களுக்கு தழையுரகமாகவும் பயன்படுத்தப்படும். கருநொச்சி இலையின் மணம் காரணமாகச் சில பூச்சிகள் இதனை நெருங்குவதில்லை.

ஆதலால் தாவரப் பாதுகாப்பில் கருநொச்சி இலை பயன்படுகின்றது. ஓலைச் சுவடிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கவும் இதைப் பயன்படுத்தியுள்ளனர். கால் வீக்கத்தைக் குறைக்க கருநொச்சி இலைகளை அரைத்து பத்துப் போடும் வழக்கம் கிராம மருத்துவத்தில் உள்ளது.

நொச்சி இலைகளை தலையணையாகச் செய்து உபயோகிக்க காய்ச்சல், தலைவலி, பீனிசம் ஆகியவை குணமாகும்.

ஜெ.தயாளினி.

## அலோசியஸுடன் 41 எம்.பிக்கள் உரையாடல்

# ஐவரின் பெயர் மட்டும் வெளியிடப்பட்டது ஏன்?

## அஜித் பெரேரா கேள்வி

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிணை முறி மோசடியுடன் தொடர்புபட்டுள்ள பேர்பெச்சுவல் டிரசரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 41 பேர் உரையாடியுள்ளனர் என பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐவரின் பெயர்களை மாத்திரம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது, ஆகவே அனைவரின் பெயர்களையும் முழுமையாக வெளியிடவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் ஊழல், மோசடிகளை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும் என மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம்.

அதனடிப்படையில் அதற்குரிய அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடத்தில் கையளித்திருந்தோம். அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது, ஜனாதிபதியும் இதற்கான அனுமதி வழங்கியுள்ளார். நீதி அமைச்சரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்

அதனடிப்படையில் முதலில் மேல் நீதிமன்றங்களில் நீதிபதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 75ஆக இருந்த மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 110 வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடிகள் தொடர்பான வழக்குகளை மூன்று நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட்பார் முறையிலான அமர்வினைக் கொண்ட விசேட மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அடுத்த சில மாதங்களுக்குள் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்புபட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் பிரதானி அர்ஜுன் அலோசியஸுடன் ஆளும் கட்சி எம்.பிக்கள் ஐந்து பேர் பேசியதாகவே மத்திய வங்கி மோசடி ஆணைக்குழு வெளியிட்டது.


எனினும் உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 41 பேர் அர்ஜுன் அலோசியஸுடன் பேசியுள்ளனர். ஆனால் ஐந்து பேரின் விபரத்தை ஆணைக்குழு வெளியிட்டுள்ளமை பிழையானது.

இதனால் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது. எனினும் ஏனைய 36 எம்.பிக்கள் தொடர்பில் எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

ஆகவே அந்த 41 பேர் யார் என்பதனை அறியவேண்டும். இதற்காக 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

எனவே 225 எம்.பிக்களின் தொலைபேசி அழைப்பு விபரத்தை சபாநாயகர் வெளியிட வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் உண்மை தன்மையை நாட்டு மக்களுக்கு தெரிவுபடுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.க. உயர் மட்டக்குழுவுடன் புதன் டில்லி செல்கிறார் ரணில்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் புதன்கிழமை இந்தியாவுக்கு அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு நாட்கள் பயணமாக நாளை மறுதினம் 22 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டில்லிக்குச் செல்லவுள்ளார்.

இந்தப்பயணத்தின் போது, இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களையும் நடத்தவுள்ளார். அமைச்சர்கள் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட உயர்மட்டக் குழுவொன்றும் பிரதமருடன் டில்லிக்குச் செல்லவுள்ளது. (இ-7)

## இ.தொ.கா.மகளிர் அணித்தலைவியை கைது செய்ய முற்பட்டதால் பதற்றநிலை

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சென்ன் பகுதி மகளிர் அணித் தலைவியை ஹற்றன் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட நிலையில் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆறுமுகம் தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஒன்று கூடியதால் அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டது. மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் கடந்த 17 ஆம் திகதி ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தார். இதனையடுத்து சென்ன் கே.எம் பிரிவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவியை கைது செய்ய பொலிஸார் நேற்று முன்தினம் அங்கு சென்றதையடுத்தே ஹற்றன் மல்லிகை பூ சந்தியில் தீவிர நிலை ஏற்பட்டது.



இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. கடந்த 16 ஆம் திகதி சென்ன் கே.எம். தோட்டத்தில் ஏற்பட்ட தீயினால் மூன்று வீடுகள் சேதமாகியதுடன் 5 குடும்பங்களை சேர்ந்த 19 பேர் நிர்க்கதிக்குள்ளாகினர். சம்பவத்தை அடுத்து கடந்த 17 ஆம் திகதி மாலை பாதிக்கப்பட்டவர்களுக்கு கூரைத் தகடுகளை வழங்க மத்திய மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீதரன் அங்கு சென்றிருந்தார்.

இந்நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மகளிர் அணித் தலைவி முறைகேடாக நடந்து கொண்டதுடன் பொருள் விநியோகத்திற்கும் தடையேற்படும் வகையில் செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அங்கு கல்லால் தாக்க முற்பட்டதாகவும் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீதரனினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து ஹற்றன் பொலிஸார் தோட்ட தலைவியை நேற்று முன்தினம் கைது செய்ய அந்த தோட்டத்திற்கு சென்ற நிலையில் கைது சம்பவம் தொடர்பில் ஆறுமுகம் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு கணபதி கனகராஜ் உள்ளிட்டோர் விஜயம் செய்ததுடன் சிறிய முறைப்பாடொன்றுக்கு ஒருவரை கைது செய்ய முடியாது என வாதிட்டனர். இதனால் பதற்றமான சூழ்நிலை நிலவியது. (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1255

Search for people, places and things

### மது




### கவி




### நீரு




### சந்தோஷ்




### ஷர்மிலி





### திலக்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய முன்பள்ளிக் கல்வி



இ.சர்வேஸ்வரா
B.Sc(Hons) spl in Sc& Edu (Jaffna) MPA (PIM-SJP)
சிரேஸ்டஉதவிப் பதிவாளர்
ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.

ஒரு பிள்ளையின் ஒட்டு மொத்த கல்வி வாழ்க்கையில் (Educational Life) முன்பள்ளிப் பருவம் என்பது முதலாவதாக அமைவதுடன் முதன்மையானதாகவும் உள்ளது. Preschool, Kindergarten, Nursery, Day Care, Play school என பல்வேறு நாடுகளிலும் பல்வேறு பெயர்களினாலும் அறியப்படும் முன்பள்ளிப் பருவம் என்பது பொதுவாக ஒரு பிள்ளையின் மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையான கல்விக் காலமாகும். இக் காலப் பகுதி என்பது ஒரு குழந்தை தன்னை எதிர் காலத்துக்கேற்ப தகவமைத்துக்கொள்ளும் மிக முக்கிய காலப்பகுதியாகும். இப்பருவத்திலேயே ஒருமனிதனின் மூளையின் எண்பது சதவீதம் விருத்தியடைவதாக மருத்துவ நிபுணர்களும் உளவியல் வல்லுநர்களும் தங்கள் ஆய்வுகளின் முடிவாக தெரிவித்துள்ளார்கள். இதனையே நமது முன்னோர் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என மொழிந்தார்கள். முன்பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நாடுகளும் தமது கல்விக் கொள்கைகளுக்கேற்ற விதத்தில் பல்வேறு விதமான அணுகுமுறைகளை பின்பற்றுகின்றன. பல் மேலைத்தேய நாடுகளில் முன்பள்ளி ஆசிரியர்களாக இருப்பதற்கு முன்பள்ளிக் கல்வித் துறையில் பட்டம் முடித்து இருக்க வேண்டும் என்பது அவசியமான நிபந்தனையாகவுள்ளது. அது மட்டுமன்றி குழந்தை உளவியல் சுகாதாரம் போசாக்கு போன்ற துறைசார் அறிவு மற்றும் திறன்சார் தகைமைகளை மெய்ப்பிப்பதற்கு ஏற்ற சான்றுப்பத்திரங்களை கொண்டிருக்க வேண்டும் என்பதும் முக்கியமான நிபந்தனையாகவுள்ளது. ஆனால் இலங்கையின் நிலைமையோ வேறானதாகவிருக்கின்றது.

## இலங்கையின் முன்பள்ளிக் கல்வி

இலங்கையின் முறைசார் கல்விமுறைகளுள் ஒன்றாகக் கருதப்படும் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் கொடுக்கப்படும் கரிசனைகளும் உரிய மட்டத்தில் இல்லை என்பது ஏற்றுக் கொள் ளப்பட வேண்டியதொன்றாகும். இலங்கையில் பிள்ளைகளின் விருத்தி தொடர்பில் 0-2 வயது வரை கொடுக்கப்படும் கரிசனை அதி உன்னதமான மட்டத்தில் உள்ளது. இருந்தும் 2-5 வயது வரையான முன்பள்ளிப் பருவ காலத்தில் வழங்கப்படும் கரிசனை என்பது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது.

உலக வங்கியின் ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கை முழுவதும் ஏறக்குறைய 17.020 முன்பள்ளிகள் உள்ளன எனவும் இவற்றில் அண்ணளவாக 29, 340 ஆசிரியைகள் பணியாற்றுவதாகவும் இம் முன்பள்ளிகளில் 84 சதவீதமானவை அரச சார்பற்ற முகாமைத்துவங்களினாலேயே பரிபாலனம் செய்யப் படுகின்றன என்பதும் கண்டறியப் பட்டுள்ளது. அதுபோன்றே முன்பள்ளிகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் உள்ள சட்ட ஏற்பாடுகளும் போதாதுள்ளதாகவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதும் இவ் ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் கல்விக் கொள்கைகளில் முன்பள்ளிக் கல்வி தொடர்பான கொள்கை வகுப்புக்கள் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டியதாகவுள்ளன.

அதனையும் தாண்டி பின்வரும் காரணங்களும் இலங்கையின் முன்பள்ளிக் கல்வி விருத்தியின்மைக் காரணங்களாகவுள்ளன.

## கல்வி அமைச்சில் முன்பள்ளிகள் தொடர்பிலான ஏற்பாடின்மை

முன்பள்ளிக் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் கீழ்பட்ட கல்வித் திணைக்களங்களில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும் முன்பள்ளிகள் அரசினால் நிர்வகிக்கப் படாத கல்விக் கட்டமைப்புக்களாகவேயுள்ளன. கல்வி அமைச்சிலும் முன்பள்ளிக் தல்வி விருத்தி தொடர்பிலான குறிப்பிடத்தக்க அலகு அல்லது பிரிவுகள் எவை யும் இல்லை. மேற்குறித்த உதவிக் கல்விப் பணிப்பாளரினாலும் முன்பள்ளிகள் மீது அதிக செல்வாக்கை உத்தியோக ரீதியில் பிரயோகிப்பது என்பது கடினமானதாகவுள்ளதுடன் சாத்தியமற்றதாகவும் உள்ளது. எனவே அரசின் பிடியில் இருந்து நழுவிய கல்விக் கட்டமைப்புக்களில் முதன்மையானவையாக முன்பள்ளிகள் உள்ளன.

## திறனற்ற முன்பள்ளி நிர்வாக கட்டமைப்பு

அநேகமான முன்பள்ளிகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் என்பவற்றினால் நிர்வகிக்கப்படுவதுடன் அவற்றின் நிர்வாகிகளுக்கு முன்பள்ளி நிர்வாகம் தொடர்பிலான அறிவு போதியளவு இல்லாமலேயுள்ளது. அதிலும் மேற்குறித்த நிர்வாக கட்டமைப்புக்கள் காலத்துக் காலம் மாற்றம் பெறுவதும் அதைத் தாண்டி பொதுவாக இக் கிராமியமட்ட



சமூகக் கட்டமைப்புக்களில் காணப்படும் உள்ளக முரண்பாடுகளும் அவற்றினால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளின் செயற்பாட்டிலும் தாக்கம் செலுத்துகின்றன. இருந்தும் மிகச் சிறப்பாக முன்பள்ளிகளை இயக்கும் நிர்வாகங்களும் உள்ளன. குறிப்பாக வடமாகாணத்தில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் நூற்றுக்கு மேற்பட்ட முன்பள்ளிகள் பரிபாலனம் செய்யப்படுவதுடன் அவற்றில் கற்பிக்கும் ஆசிரியைகளுக்கான கொடுப்பனவுகளையும் குறித்த சமாசமே வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கது.

## ஆசிரியர்களுக்கான அடிப்படைத் தகைமையின்மையும் குறைந்த ஊதியமும்

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான அடிப்படைக் கல்வித் தகைமை எதுவென்பது இதுவரை சட்டரீதியாக வரையறை செய்யப்படவில்லை. அநேகமான முன்பள்ளிகளில் க.பொ.த உயர்தரச் சித்தியற்ற பலர் ஆசிரியைகளாக பணியாற்றுகின்றார்கள். முன்பள்ளி ஆசிரியைகளுக்கான அடிப்படைச் சம்பளம் தொடர்பில் எந்தவிதமான திட்டமிடப்பட்ட சம்பளக் கொள்கைகளும் இல்லாத காரணத்தினால் மிகக் குறைந்த ஊதியத்துடன் அல்லது சேவை மனப்பாங்குடன் முன்பள்ளி ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டியிருப்பது கவலைக்குரியதாகும். இருந்தும் சில மாகாணசபைகள் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கிவருகின்றன. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானவர்களுக்கே வழங்கப்படுகின்றது. சம்பள முறைமையிலிருக்கும் பாதகங்களினால் தரமான முன்பள்ளி ஆசிரியைகளை தக்க வைப்பதும் உருவாக்குவதும் பெரும் சவாலான விடயமாகவுள்ளது.

அதுபோன்றே முன்பள்ளி ஆசிரியைகளின் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்களும் மிகக் குறைந்தளவிலேயே உள்ளன. கல்வியியல் துறைகளை கொண்டுள்ள பல்கலைக்கழகங்கள் முன்பள்ளிக் கல்விதொடர்பிலான சிலகற்கைநெறிகளை வழங்கி வந்தாலும் அவற்றின் செறிவும் தரமும் போதாததாகவேயுள்ளது. அத்துடன் அனுமதி நிபந்தனைகள் க.பொ.த உயர்தரத்தை மையப்படுத்தியிருப்பதனால் பல முன்பள்ளி ஆசிரியைகள் அடிப்படைத் தகுதியை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாண்மைவிருத்திக் கற்கைகளை தொடர்வதில்லை. பொருளாதார ரீதியில் ஆசிரியைகள் எதிர்நோக்கும் பின்னடைவுகளும் இவ்வாறான வாண்மைவிருத்திக் கற்கைகளில் இருந்து அவர்களை தூரவிலகச்செய்கின்றது.

## பௌதீக வள விருத்தி இன்மை

முன்பள்ளிகளில் பிள்ளைகளின் உடல்உள ஆரோக்கியத்தை மேம்படுத்தத்தக்க பௌதிகவள ஏற்பாடுகள் போதியளவு இல்லாவிட்டாலும் கருதத்தக்களவிலாயினும் இருத்தல் வேண்டும். பொருத்தமான வகுப்பறைச் சூழலை உருவாக்குவதற்கான தளபாட வசதிகள், பூங்கா, உள்ளக விளையாட்டு உபகரணங்கள், ஒலி ஒளிசாதனங்கள், கழிப்பறை வசதிகள் என்பன அவசியமாக ஒரு முன்பள்ளியில் இருக்க வேண்டிய பௌதிக வள ஏற்பாடுகளாகும். இவ்வாறான பௌதிக வள ஏற்பாடுகள் என்பது பிள்ளையின் ஆளுமை விருத்தி, கூட்டுணர்வு மனப்பாங்கு, புதிது புனையும் ஆற்றல் என்பவற்றை விருத்திசெய்யவும் மிகவும் அவசியமானது. இருந்தும் பல முன்பள்ளிகளில் பௌதிகவள பற்றாக் குறையே நிலவுகின்றது. முன்பள்ளிகளின் பௌதிக வளங்களை விருத்தி செய்வதற்கான அரசநிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதில்லை. குறிப்பாக நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் கல்வித் துறைக்காக ஒதுக்கப்படும் பெருமளவு நிதியில் சிறிதளவேனும் முன்பள்ளிக் கல்வி விருத்திக்கு ஒதுக்கப் படுவதில்லை.

இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி மூலமாக அரசியல் வாதிகளுடன் தொடர்புள்ள முன்பள்ளிகள் தமது தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யத்தக்க ஏற்பாடுகள் உள்ளமையையும் கவனிக்கத்தக்கது. ஆனால் பொருளாதார பின்னடைவுடன் இயங்கும் பல முன்பள்ளிகள் பௌதிக வளவிருத்தியில் அக்கறையற்று இருப்பதும் நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்கள் மூலம் கிடைக்கும் பௌதிகவளங்களை கூட பராமரிக்க முடியாதிருப்பதும் கவலைக்குரியது.

எதிர்காலத்தில் நல்ல விளைச்சலைத் தரவல்ல தலைமுறையின் நாற்றுமேடைகளாகவிருக்கும் (Nursery) முன்பள்ளிகள் தொடர்பில் கவனம் எடுப்பது மிக அவசியமானது.

முன் பள்ளிகளில் வழங்கப்படும் ஆரோக்கியமான அடித்தளமே- ஒருபிள்ளையின் ஒட்டு மொத்த கல்வி வாழ்க்கையினதும் வெற்றியைத் தீர்மானிக்கின்றது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் தேசிய இலக்குகளை அடைவதற்குமான பல்வேறு ஏற்பாடுகள் குறித்து சிந்திக்கின்ற போதும் அவை அனைத்துக்கும் அடிப்படையாகவிருக்கும் முன்பள்ளிகள் குறித்த விழிப்புணர்வும் மீளாய்வும் போதியளவு இல்லாதிருப்பது கவலைக்குரியதே.

எனவே எதிர்காலத்தில் முன்னெடுக் கப்படவுள்ள கல்வி கொள்கை மறுசீரமைப்புக்களிலும் மீளாய்வுகளிலும் முன்பள்ளி கல்வி தொடர்பில் அதிக கவனம் எடுத்தல் அவசியமானது.

# மொத்த கடனும் நல்லாட்சி அரசு ஆட்சிக்காலத்தில் அடைக்கப்படும்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கு 3 ட்ரில்லியன் ரூபாய் கடன் சுமையுள்ள நிலையில், குறித்த மொத்த கடனும் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நிறைவு செய்யப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.



நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் "இலங்கையின் கருவூலத்துறை நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு மக்களின் மீதான கடன் சுமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்என அவா மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒப்பற்ற தலைவரே மகிந்த கோத்தபாய புகழாரம்

## லைக் போட்ட நாமல்


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 72 ஆவது பிறந்த நாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.


மகிந்த தனது பிறந்த நாளை குடும்பத்தாருடன் கேக் வெட்டி கொண்டாடியதுடன் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இந் நிலையில் மகிந்த ராஜபக்ஸவின் சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"சகோதரர், ஒப்பற்ற தலைவர் மற்றும் வழிகாட்டியான மகிந்த ராஜபக்ஷவுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.



இவருடைய பதிவுக்கு




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ விருப்பம் (Like) தெரிவித்துள்ளார். (இ-7)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2017-15.12.2017



எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக விளங்கும் துலாம் இராசி வாசகர்களே!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருவும் இணைந்திருக்கிறார். சந்திர பலத்தோடு இந்த மாதம் பிறக்கிறது. எனவே தன வரவு திருப்திகரமாக இருக்கும். தக்க விதத்தில் குடும்ப முன்னேற்றம் கூடும். தொழில் வளர்ச்சி உண்டு. நண்பர்களின் நல் ஆதரவோடு வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள்.

தற்சமயம் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. இருந்தாலும் டிசெம்பர் 19ஆம் திகதி சனி விலகப் போகிறது. விலகிய பின்னால் மிக அற்புதமான பலன்கள் நடைபெறும். குறிப்பாக மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறி தென்படும். மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட வாய்ப்புகள் கைகூடிவரும்.

தன ஸ்தானத்தில் விரயாதிபதி புதன் இருக்கிறார். அவரோடு லாபாதிபதி சூரியனும் இணைந்து சஞ்சரிக்கிறார். இந்தப் புத-ஆதித்ய யோகம் சிறப்பானது என்றாலும், அவரோடு சனியும் சேர்ந்திருப்பதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சியில் தடைகள் வரலாம். கடல் தாண்டிச் செல்லும் முயற்சிகள் கைகூடவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வீடு மாற்றங்கள் அல்லது உத்தியோக மாற்றங்கள் விரும்பியபடி வந்து சேரும். சனி விலகுவதற்கு முன்னதாகத் திடீர் மாற்றங்களை உங்களுக்கு கொடுக்கலாம். வீடு மாற்றம் நல்ல மாற்றமாகவே வந்து சேரும்.

ராகு உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10இல் உள்ள ராகு முத்தான பலன்களைக் கொடுப்பார் என்பது முன்னோர்கள் வாக்கு. எனவே உத்தியோகத்தில் உள்ளவர்களில் ஒரு சிலர் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு, தனித்து இயங்க முற்படுவார்கள். அதற்கு தேவையான பொருளாதாரமும் வந்து சேரும். சனிக்குரிய சிறப்பு தலங்களாக விளங்கும் திருநள்ளாறு அல்லது பெரிச்சி கோவிலுக்கு சென்று வழிபாடு செய்வது நல்லது.

இம்மாதம் திருக்கார்த்திகை திருநாள் வருவதால் அன்றைய தினம் முருகப்பெருமானை வழிபட்டால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்லலாம்.

பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள். நூதனப் பொருட்சேர்க்கை உண்டு. ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். இல்லம் கட்டிக் குடியேறுவதில் இருந்த தடை அகலும்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!

டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,7இற்கு அதிபதியான செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது நன்மைகள் அதிகம் நடைபெறும். உடன் பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முன்வருவீர்கள்.




புதனின் வக்ர காலம்!

நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 12ஆம் திகதி வரை, விருச்சிக இராசிக்குள் புதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கு 9,12-க்கு அதிபதியானவர் புதன். விரயாதிபதியான புதன் 2இல் வக்ரம் பெறும் பொழுது, நன்மைகளை வாரி வழங்கும். குறிப்பாக பயணங்களில் பலன் கிடைக்கும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்தபடியே பதவி உயர்வு கிடைக்கும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவையும், வெள்ளிக்கிழமை தோறும் சுக்ரனையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும் மாதம் இது. உறவினர்களின் ஆதரவு கூடுதலாக கிடைக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைக்க முக்கியப் நபர்களின் ஒத்துழைப்பு உண்டு. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஏழரைச் சனி விலகும் நேரம் என்பதால் எதிர்பார்த்த நற்பலன்கள் வரப்போகிறது. சுப நிகழ்ச்சிகள் குறிப்பிட்டபடி நடைபெற சந்தர்ப்பங்கள் கை கூடிவரும். கணவன்- மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களை நம்பி, புதிய பொறுப்புகளை தலைமை அதிகாரி ஒப்படைப்பார். வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்!

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்

நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் சுக்ரன் செல்கிறது. உங்கள் இராசி நாதனாகவும், அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் 2இல் சஞ்சரிக்கும் பொழுது புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் சில ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கைகூடலாம். புத- ஆதித்ய யோகம் இருப்பதால் செல்வாக்கு மேலோங்கும். முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல சூரிய பலம் கைகொடுக்கும்.

தாய்வழி உறவினர்களால் தக்க உதவி கிடைக்கும். விட்டுப்போன விவாகப் பேச்சுகள் மீண்டும் தொடங்கும். அங்காரக வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள இயலும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



நம்பிக்கைக்கு உரியவர்களிடம் மட்டும் மனம் விட்டுப் பேசும் விருச்சிக இராசி வாசகர்களே!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே தொழில் ஸ்தானாதிபதி சூரியனும், லாபாதிபதி புதனும், சகாய ஸ்தானாதிபதி சனியும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வருமானம் இருமடங்காகும். வசதி வாய்ப்புகள் பெருகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

உடன் பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பர். பாதியில் நின்ற கட்டடப்பணி மீண்டும் தொடரும். பதவியில் உள்ளவர்களால் உதவிகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து அலை மோதும்.

அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தொழில் தொடங்கும் முயற்சிகளுக்கு வங்கிகளில் கடன்உதவி கிடைக்கலாம். 9ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால், புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டு.

கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் வாய்ப்புகள், வீட்டை விரிவு செய்யும் அமைப்புகள், புதிய தோட்டம் வாங்கி விவசாயம் செய்து பணவரவை பெருக்கிக் கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் கைகூடும் நேரமிது. உடன் பிறந்தவர்களும், உடன் இருப்பவர்களும் உதவியாக இருப்பார்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கலாம். குரு பார்வை சுக ஸ்தானத்தில் பதிவதால், மனையில் மங்கல ஓசை கேட்கும். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். திருக்கார்த்திகையன்று வடிவேலவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

ஜென்மச் சனி விலகும் நேரம் வந்து விட்டது. இனி உங்களுக்கு உடலில் புது உற்சாகம் குடிகொள்ளும். சனி விலகுவதற்கு முன்னதா

யான விருச்சிக இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். இதன் விளைவாக மிகுந்த நற்பலன்கள் வந்து சேரப்போகிறது. சப்தம விரயாதிபதி, இராசியில் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். வாழ்க்கைத் துணையால் நன்மை உண்டு. அவர்களின் உத்தியோக நலன் கருதி ஏதேனும்




முயற்சிகள் செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!

டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதன்

செய்வர். எதிரிகள் விலகுவர். தொட்டது துலங்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட வாய்ப்புகள் கைகூடிவரும். தொழில் முன்னேற்றம் கூடும் நேரமிது.

புதனின் வக்ர இயக்கம்!

புதன் உங்கள் இராசியைப் பொறுத்தவரை லாபாதிபதி மட்டுமல்ல, அஷ்டமாதிபதியாகவும் விளங்குபவர். அவர் வலிமை இழக்கும் இந்த நேரம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக அமையும். செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். திடீர் பயணங்களால் நன்மை உண்டாகும். தூரதேச அழைப்புகள் வரக்கூடிய வாய்ப்பு உண்டு. பேரும், புகழும் அதிகரிக்கும் நேரமிது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்வதோடு, சர்ப்ப சாந்திப் பரிகாரமும் செய்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

அமைதியும், ஆனந்தமும் ஏற்படும் மாதம் இது. எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடைபெறும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு வாங்கும் யோகம் முதல், விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கும் வாய்ப்புகள் வரை அனைத்தும் கை கூடும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு அனை

## அமைதியும் ஆனந்தமும் ஏற்படும்!

கவே திருநள்ளாறு, குச்சனூர், பெரிச்சிக் கோவில், நல்லிப்பட்டி, திருக்கொள்ளிக் காடு, திருக்கொடியலூர் போன்ற தலங்களில் உள்ள சனீஸ்வர பகவானை சென்று வழிபட்டு வருவது நல்லது. அனுகூல நாளில் சென்று வழிபட்டால் அனைத்து யோகங்களும் கிடைக்கும்.

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!

நவம்பர் 28ஆம் திகதி உங்கள் இராசி

செவ்வாய் விரயஸ்தானத்திற்கு வருகிறாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 6ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் செவ்வாய். அவர் 12ஆம் இடத்திற்கு வரும்பொழுது விபரீத ராஜயோகம் செயல்படும். எனவே திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திறமைமிக்கவர்கள் உங்களுக்கும் பின்னணியாக இருந்து உதவிகள்

த்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாயின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. செல்வமுத்துக்குமரன் வழிபாடு செல்வவளம் பெருக்கும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பால் வென்ற அரசன்

(18.11.2017 தொடர்ச்சி...)

ஒருநாள் அதிகாலை.குளிர் அதிகமாக இருக்கும் ஒரு பனி நாள்.ஒரு பாறை மீது நல்ல வெய்யிலில் படுத்திருந்தான் சுதர்மன். சற்றே கண் அயர்ந்தவன் பெரும் கூச்சல் கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான். அவனைச் சுற்றி சோழவீரர்கள் நின்றிருந்தனர்.

பல நாட்களாகக் கிடைக்காத பகை அரசர் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் வீரர்கள் ஆரவாரம் செய்தனர். அவர்கள் சுதர்மனைச் சங்கிலியால் கட்டி இழுத்துச் சென்றனர்.

சிறையில் அடைக்கப்பட்ட சுதர்மன் பல கொடுமைகளுக்கு ஆளானான். மாபெரும் மன்னனான சோழச் சக்கரவர்த்திகளை எதிர்த்துப் போரிட்டமைக்காக பல நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான்.

மன்னன் சபை கூட்டி மன்னிப்பு வேண்டுமாறு கூறியபோதும் மறுத்து விட்ட சுதர்மனுக்கு மரண தண்டனை விதித்தான் சோழன். மறுநாள் சிங்கக் கூண்டினுள் தள்ளப்பட்டு சிங்கத்திற்கு இரையாகவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொழுது விடிந்தது. தங்களின் மன்னனின் நிலையைக் கேள்விப்பட்ட மக்கள் துயரத்துடன் கூடினர். சோழமன்னனும் மற்றயோரும் வந்து அமர்ந்தனர். சிங்கம் ஒன்று கூண்டினுள் பசியுடன் அலைந்துகொண்டு கர்ஜனை புரிந்தபடி இருந்தது.

அந்தப் பெரும் பள்ளத்தில் சுதர்மனைத் தள்ளிவிட்டு சிங்கத்தின் கூண்டையும் திறந்து விட்டார்கள் காவலர்கள்.

அனைவரும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். வீரசிங்கத்திற்கும் காட்டு சிங்கத்திற்கும் பெரும் சண்டை தொடங்கப் போகிறது.

பலநாட்களாகப் பட்டினியாக இருக்கும் சிங்கம் வெல்லுமா? பலநாட்களாகப் பட்டினியாக இருக்கும் சுதர்மன் வெல்வானா?



அனைவரின் கண்களும் இமைப்பதை மறந்தன.

கூண்டைத் திறந்து விட்டவுடனேயே சிங்கம் பாய்ந்து வந்தது. சுதர்மனின் இரண்டு கரங்களிலும் தன் முன்னங்கால்களை வைத்து தன் பெரிய வாயைத் திறந்து பெரும் கர்ஜனை செய்தது. அதைக் கேட்ட மக்கள் அனைவரும் நடுநடுங்கினர்.

மன்னன் மாய்ந்தான் என சிலர் கண்களை மூடிக் கொண்டனர். சிலர் அவரவர் இறைவனை வேண்டிக்கொண்டனர்.

வேறு சிலர் இந்தக் கொடூரக் காட்சியை ரசிக்கக் காத்திருக்கும் சோழனை வெறுப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் நடந்தது என்ன.ஒரு ஆச்சரியம் நடந்தது அங்கே. ஆம். சீறி வந்த சிங்கம் சிறு நாய்க் குட்டிபோல சுதர்மனின் அருகே மண்டியிட்டு அமர்ந்தது.

அவனது காலை நக்கிக் கொடுத்தது. அன்போடு அவன் மடியில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டது.

இக்காட்சியைக் கண்ட மக்கள் பெரும் ஆரவாரம் செய்தனர். சுதர்மர் வாழ்க. அன்புள்ளம் கொண்ட பண்பாளர் வாழ்க.

என்ற மக்களின் குரல் ஓங்கி ஒலித்தது. சோழன் தன் இருக்கையிலிருந்து எழுந்து வந்து சுதர்மனை அணைத்துக் கொண்டான்.

"சுதர்மரே! உமது அன்புள்ளத்திற்கு நான். அன்பால் யாரையும் வெல்லலாம் என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன். இந்த சிங்கத்திடம் நீர் என்ன கூறினீர் என்பதை மக்கள் அறியக் கூறுங்கள்" என்றார்.

"அரசே! நான் காட்டில் அலையும் போது ஒரு சிங்கத்தின் காலில் தைத்த முள்ளை நீக்கி அதன் வேதனையை நீக்கினேன். அது இந்தச் சிங்கம்தான்.

நன்றி மறவாத சிங்கம் என்னையும் நான் செய்த உதவியையும் நினைவில் வைத்துக் கொண்டு என்னிடம் அன்புடன் நடந்து கொண்டது".

"நண்பரே! அன்பால் மனிதரை மட்டுமின்றி விலங்குகளையும் வெல்லலாம் என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன்.

இனி நீர் சுதந்திரமாக உமது நாட்டுக்குச் செல்லலாம். நாம் இனி நண்பர்களாக இருப்போம்.

இந்தச் சிங்கம் உமக்கு நான் அளிக்கும் பரிசு."

சுதர்மன் மகிழ்ச்சியுடன் தன் நாடு திரும்பினான். மக்கள் அவனை அன்பால் வென்ற அரசன் என்று போற்றினர்.

நாமும் அன்பை கைக்கொள்வோம் அன்பால் உலகை வெல்வோம்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2017 20

- 284- டயோக்கிளேசியன் ரோமப் பேரரசின் மன்னன் ஆனான்.
- 1658- இலங்கையில் போர்த்துக்கீசர் மீதான வெற்றியைக் குறிக்க இந்நாள் டச்சு ஆட்சியாளர்களினால் நன்றி தெரிவிப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1917- உக்ரேன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1936- ஸ்பானிய அரசியல்தலைவர் ஜோசே அன்டோனியோ பிறிமோ டெ ரிவேரா கொல்லப்பட்டார்.
- 1940- இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா, சிலவாக்கியா ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.
- 1947-இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.
- 1962- சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து, ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டுவந்த பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது.
- 1977- ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் றோகண விஜேவீர விடுதலை செய்யப்பட்டார்.
- 1979-சவுதி அரேபியாவில் மெக்காவில் காபா மசூதியைத் தாக்கிய சுணி முஸ்லிம் தீவிரவாதிகள் 6,000 பேரைப் பணயக் கைதிகளாக்கினர். பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- 1985- மைக்ரொசொப்ட்டின் வின்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.
- 1992- இங்கிலாந்தில் வின்சர் அரண்மனையில் தீ பரவியதில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1993- மசெடோனியாவில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 116 பயணிகளில் 115 பேரும் 8 சிப்பந்திகளும் உயிரிழந்தனர்.
- 1998- பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 1999- மன்னார் மடு தேவாலயம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 42 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1750- திப்பு சுல்தான், மைசூர் பேரரசர் (இ. 1799)
- 1858- செல்மா லோவிசா லேகர்லாவ், நோபல் பரிசு பெற்ற சுவீடிய எழுத்தாளர் (இ. 1940)
- 1910- எம். கே. ராதா, தென்னிந்திய நாடக, திரைப்பட நடிகர் (இ. 1985)
- 1923- நாடின் கார்டிமர், நோபல் பரிசு பெற்ற தென்னாப்பிரிக்க எழுத்தாளர் (இ. 2014)
- 1942- ஜோ பைடன், அமெரிக்க அரசியல்வாதி
- 1962- ராஜ்குமார் கிரானி, இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர்
- 1980- சாலினி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை
- 2015- மாலியில் தங்குவிடுதி ஒன்றில் இடம்பெற்ற தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

### இறப்புகள்

- 1861- பியர் ரே பிறெடெரிக் சாரசு, பிரான்சியக் கணிதவியலாளர் (பி. 1798)
- 1882- என்றி டிரேப்பர், அமெரிக்க மருத்துவர், வானியலாளர் (பி. 1837)
- 1910- லியோ டால்ஸ்டாய், ரஷ்ய எழுத்தாளர் (பி. 1828)
- 1975- பிரான்சிஸ்கோ பிராங்கோ, எசுப்பானியப் பிரதமர் (பி. 1892)
- 1988- பெலிக்சு யூரியேவிச் சீகல், சோவியத் வானியலாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- புரட்சி நாள் (மெக்சிக்கோ)
- ஆசிரியர் நாள் (வியட்நாம்)
- குழந்தைகள் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 250 | 240 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 700 | 800 | 800 |
| தக்காளி | 140 | 150 | 120 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 60 | 50 | 50 |
| கோவா | 150 | 150 | 160 | 200 | 120 |
| கரட் | 150 | 150 | 250 | 320 | 200 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 | 50 |
| புடோல் | 120 | 100 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 130 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 200 | 150 | 160 | 120 |
| பாகற்காய் | 350 | 600 | 350 | 400 | 350 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 40 | 100 | 200 | 80 | 70 |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 250 | 350 |
| லீக்ஸ் | 150 | 300 | 40 | 300 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 200 | 160 | 100 |
| கறிமிளகாய் | 300 | 300 | 180 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 120 | 200 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 180 | 200 | 200 |
| கத்தரிக்காய் புள்ளி | 200 | 100 | 200 | 180 | 150 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 60 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 50 | 100 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 60-100 | 120 |
| இராசவள்ளி | – | – | 55 | – | – |
| வெங்காயப்பூ | – | – | – | 200 | – |
| முள்ளங்கி | – | – | 80 | 160 | 70 |
| பொன்னாங்காணி | 50 | – | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | – | 20 | 25 | 30 |
| ஈரப்பலா | 100 | – | 70 | 60 | 80 |

அறம் கணக்கற்ற பாவங்களை மூடி விடும்!
- புனித பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## கர்ணனுக்குப் புண்ணியம் போதாது எங்களுக்குப் பாவம் போதாது

தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஞான பூமி என்ற ஆன்மிக சஞ்சிகையில் வாசகர்களின் கேள்விகளுக்கு காஞ்சிப் பெரியவர் பதில் அளிக்கின்ற ஒரு பகுதி இடம்பெற்றிருந்தது.

அதில் ஒரு கேள்வி குருஷேத்திரத்தில் கர்ணன் வீழ்ந்து கிடக்கிறான். அவன் செய்த தர்மம், புண்ணியம் அவன் உயிரைப் பாதுகாக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் கண்ணன் அந்தணர் வடிவத்தில் கர்ணனிடம் சென்று கர்ணா நீ! கொடைக்குரியவன் என்றறிந்து இங்கு வந்தேன். நீ செய்த புண்ணியத்தை எனக்குத் தருவாயா என்று கேட்கிறார்.

இவ்வாறு அந்த அந்தணர் கேட்ட மாத்திரத்தில் அம்பால் தன் உடலைத் துளைத்து குருதி எடுத்து தான் செய்த புண்ணியத்தை தானமாகக் கொடுக்கிறான் கர்ணன்.

இப்போது எமக்கு ஏற்படும் சந்தேகம் கர்ணன் தான் செய்த புண்ணியத்தை தானமாகக் கொடுத்தால் கர்ணனின் புண்ணியம் இன்னும் அதிகரிக்க வேண்டுமல்லவா! அப்படி அதிகரித்திருந்தால் அவனின் உயிர் பிரிய முடியாதல்லவா!

இந்தக் கேள்விக்கு காஞ்சிப் பெரியவர் பதிலளிக்கிறார். கர்ணன் தன் புண்ணியத்தை தானமாகக் கொடுத்ததால் அவனின் புண்ணியம் அதிகரித்திருக்க வேண்டும் என்பது உண்மை. அது நடந்தும் உள்ளது.

ஆம், கர்ணன் மோட்சத்தை அடைவதற்கு இன்னும் ஒரு பகுதி புண்ணியம் தேவைப்பட்டது.

இந்நிலையில் அந்தணர் வடிவத்தில் வந்த கண்ண பரமாத்மாவுக்கு தான் செய்த புண்ணியத்தை கர்ணன் கொடுத்ததால் சொர்க்கத்துக்குச் செல்வதற்குத் தேவையான புண்ணியம் கர்ணனுக்குக் கிடைத்துவிட, அவனின் ஆத்மா சொர்க்கத்தை அடைந்தது என்றார்.

காஞ்சிப் பெரியவரின் இந்தப் பதில் பலரின் சந்தேகத்துக்கு தீர்வு கண்டுவிட்டது எனலாம்.

அட, பல வருடங்களுக்கு முன்னர் ஞான பூமியில் வந்த இந்தக் கேள்வி பதில் விடயம் இப்போது எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் அதற்குக் காரணம் நம் மண்ணில் இடம்பெறும் பாவச் செயல்கள் என்றே சொல்ல முடியும்.

எங்கும் பாவச் செயல்கள், அக்கிரமங்கள் தலைவிரித்தாடுகின்றன. டெங்கு மனித உயிர்களைக் காவு கொள்கிறது என்று தெரிந்தும் வீட்டுக் கழிவுகளை வீதியில் கொட்டும் பாவம் இன்னும் தொடர்கின்றது.

தமிழ் மக்கள் போரால் ஏகப்பட்ட இழப்புக்களைச் சந்தித்தனர். சித்திரவதைகளை அனுபவித்தனர் என்பதை உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்டிருக்கும்போதும் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் அதனை மறந்து தமிழினத்துக்கும் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் வஞ்சகம் செய்கிறார்களே இது ஏன்? என்று நம் உள்ளத்தில் எழுந்தபோதுதான் ஞானபூமியில் காஞ்சிப் பெரியவர் அளித்த பதில் ஞாபகத்துக்கு வந்தது.

ஆம், கர்ணனுக்கு புண்ணியம் போதாது போல, எங்களுக்கு இன்னும் கொஞ்சம் பாவம் தேவையாக உள்ளது போலும்.

அதனால்தான் பாவகாரியம் எந்தவித சஞ்சலமுமின்றி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதில் தவறில்லை.

# இராணுவத்தை அரசியல்மயப்படுத்தியவர் கோத்தபாய ராஜபக்ஷவே-சரத் பொன்சேகா

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்புச்செயலராக இருந்த போது, இராணுவத்தை அரசியல்மயப்படுத்தினார் என்று முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர்,

"கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத்துக்குள் அரசியல் செல்வாக்கைப் புகுத்த முயன்றதால், இராணுவம் இரண்டாக பிளவுபடுத்தப்பட்டது. மகிந்த ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியை இழப்பதற்கு இதுவும், முக்கியமான காரணங்களில் ஒன்று.

இராணுவத்தில் பணியாற்றிய போது, கோத்தபாய ராஜபக்ஷ, ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய போன்றவர்கள், குற்றங்களில் ஈடுபட்டனர். இப்போது அவர்கள் இராணுவத்தின் பெயரைக் கெடுக்கின்ற போலி தேசப்பற்றாளர்களாக இருக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இராணுவத்தை மதிக்கவில்லை. என்னை சிறையில் அடைத்தார். இன்னும் 35 இராணுவ அதிகாரிகளை இராணுவத்தில் இருந்து துரத்தினார்.

மகிந்த ராஜபக்ஷவின் தவறான முடிவுகளால், இராணுவத்தின் நற்பெயர் கெட்டுப் போனது.

இராணுவ அதிகாரிகள் நம்பிக்கையிழந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசியக் கொடியை தூக்கிய சம்பந்தனுக்கு நீங்கள் காட்டிய நல்லெண்ணம் என்ன?

## அமைச்சர் மனோ தெற்கு தலைமைகளிடம் கேள்வி

(கொழும்பு)

தேசியக் கொடியை தூக்க மறுத்த வடமாகாண சபை அமைச்சரை கண்டிப்போம். ஆனால், இன்று இந்த அமைச்சர் தேசியக் கொடியை தூக்கவில்லை என்பதில் குறை காணும் தென்னிலங்கை தீவிரவாதிகள், அன்று தேசியக் கொடியை தூக்கிய சம்பந்தனுக்கு காட்டிய நல்லெண்ணம் என்ன?

தமிழ் அரசியலில் இருக்கின்ற முற்போக்காளர்களை பலமடைய வைக்க சிங்கள அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் தவறிவிட்டன. இப்போதும் கூட சம்பந்தனை வெறுங்கையுடன் ஒன்றும் தராமல் ஓட்டிவிடத் தானே நீங்கள் முயல்கிறீர்கள்? ஒரே நாடு என்ற அடையாளத்துக்குள் வந்துவிட்ட சம்பந்தனை பலவீனப்படுத்தினால், வடக்கில் தீவிரவாதம் பலமடைவதை எவராலும் தடுக்க முடியாது.

ஆகவே இன்று வடக்கில் ஒரு தமிழ் கல்வி அமைச்சர் தேசிய கொடியை தூக்க மறுத்ததற்கு தென்னிலங்கை தீவிரவாதிகள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

அவர்மேலும்கூறியதாவது,

இந்த தேசியக் கொடி உடபட்ட அரசியலமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று உறுதிமொழி அளித்துவிட்டுத்தான், அனைத்து பாராளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அதுதான் சட்டம். இப்படி தேர்தலில் வெற்றி பெற்று வந்துவிட்டு, அமைச்சர் பதவியையும் பெற்றுவிட்டு இப்போது கொடியை தூக்க மாட்டேன் என்பது முரண்பாடானதாகும்.

எனினும் இத்தகைய முரண்பாடானஒரு நிலைமை வடக்கில் இன்று உருவானதற்கு தெற்கின் சிங்கள தீவிரவாத அரசியல்வாதிகள் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். எல்லாவற்றையும் வடக்கின் மீது, தமிழர் மீது சாட்டிவிட்டு தப்பிக் கொள்ள முடியாது என்றார். (மு-4)

# சுனாமி வதந்தியா? 117க்கு அறிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழில் சுனாமி அனர்த்தங்கள் தொடர்பான செய்திகள் பரவினால் உடனடியாக 117 என்ற இலவச அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுனாமி அனர்த்தங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட தகவலை பெற்றுக்கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவத்தின் உதவிப் பணிப்பாளர் ரவி சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார். அவர் தொடரந்து தெரிவிக்கையில்,

"யாழின் சில பகுதிகளில் அண்மைய நாட்களாக சுனாமி அனர்த்த வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இதனால் மக்கள் மத்தியில பீதி ஏற்படுவதுடன் இடம் பெயரகின்ற சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

எனவே இவ்வாறான பொய்யான தகவல்களை மக்கள் நம்பி ஏமாற வேண்டாம் என்றார். (மு-4)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கர்ப்பிணிகள் இருட்டில் போகக்கூடாதா?**

சாதாரணமாக இருட்டு வேளைகளில் பேய் பிசாசுகள் வெளியில் வந்து மனிதர்களுக்குத் தொந்தரவு கொடுக்கத் தொடங்கும்.

வாய்ப்புக் கிடைத்தால் உடலின் பிற பகுதிக்குள் புகுந்து தொல்லை தரும். அதைத்தான் நாம் பேய் அடித்து விட்டது என்று கூறுகிறோம்.

கர்ப்பகாலத்தில் பேய் அடித்துவிட்டால் அது கர்ப்பத்தில் உள்ள சிசுவைப் பாதிக்கும். அதற்கும் தொல்லைகள் ஏற்படும். எனவேதான் கர்ப்பிணிப் பெண்கள் இருட்டு வேளைகளில் வெளியில் செல்லக்கூடாது என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.


ஏதாவது முக்கியமான வேலையாக வெளியில் போக வேண்டியிருந்தால் மார்பைத் துணியால் மூடிக்கொண்டு கையில் இரும்புத் துண்டை வைத்துக்கொண்டு இறைவனின் நாமத்தைச் சொல்லிக்கொண்டே போகவேண்டும். இரும்பைக் கண்டாலும் தெய்வ நாமத்தைக் கேட்டாலும் பேய் பிசாசுகள் பயந்தோடி விடும். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** ஒலுமடு, சேனைப் புலவு, ஒதியாமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில் புளியங்குளம், நெடுங்கேணி மொபிற்றல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** பம்பை மடு கிராமம், கற்பகபுரம் கிராமம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குரு நதுப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப் பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உன்னையே நீ அறிவாய்




இரும்பு ஒரு கரண்டியாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு இரும்பு என்றாலும் கரண்டி என்றாலும் அது ஒரு பொருளையே குறிக்கும். அதுபோல் தெய்வம் என்ற அருட்பேராற்றலே பேரியக்க மண்டலத்தில் இயங்கும் எல்லாமாக இருக்கிறது. நீயுமாக மனித வடிவமாக இருப்பதும் அதுவே. இந்தக் கருத்தில் மனத்தைப் பதித்துக் கொண்டு உண்மையை உணர்ந்து கொள். நீயென்றாலும் தெய்வமென்றாலும் ஒரு பொருளையே குறிக்கும்.

கரண்டியை உருக்கிவிட்டால் இரும்புக்குக் கொடுத்த வடிவம் மறைந்து விடுகிறது. அவ்விரும்புக்கு கரண்டி என்று கொடுத்த பெயர் மறைந்து விடுகிறது. என்ன மிச்சம்? இரும்பு தான். இரும்பைப் பல வடிவங்களாக்கி, பெயர்களை அக்கருவிக்குக் கொடுக்கிறோம். வடிவத்தையும் பெயரையும் கழித்துவிட்டால் மிஞ்சுவது இரும்புதானே!

அதேபோன்று, நீ உன்னையறிந்து கொள்ள முயற்சி செய்! மனிதனென்ற வடிவத்தையும், உன் செயல் பதிவுகளாக உள்ள வினைப்பதிவுகளையும் கழித்துப் பார்! உன்னில் மிஞ்சுவது எல்லாம் வல்ல அருட்பேராற்றலாக விளங்கும் பரம்பொருளே.

# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்தாட்டம்

# கேரளா- கொல்கத்தா ஆட்டம் சமநிலையானது







ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. கேரளா-கொல்கத்தா அணிகள் இடையிலான தொடக்க ஆட்டம் கோல் இன்றி சமநிலையில் முடிந்தது.

4 ஆவது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து திருவிழா கொச்சியில் நேற்று முன்தினம் கோலாகலமாக தொடங்கியது. இதில் அட்லெடிகோ டி கொல்கத்தா, சென்னையின் எப்.சி., டெல்லி டைனமோஸ், கேரளா பிளாஸ்டர்ஸ், மும்பை சிட்டி எப்.சி., புனே சிட்டி எப்.சி., நார்த் ஈஸ்ட் யுனைடெட் (கவுகாத்தி) எப்.சி., கோவா எப்.சி., பெங்களூர் எப்.சி., ஜாம்ஷெட்பூர் எப்.சி. ஆகிய 10 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும்.

தொடக்க விழா கொச்சியில் உள்ள நேரு ஸ்டேடியத்தில் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நடந்தது. ஹிந்தி நடிகர் சல்மான்கான் நடன கலைஞர்கள் புடைசூழ பேட்டரி சைக்கிளில் மைதானத்தை வலம்வந்தார். பின்னர் அவரும், பாலிவுட் நடிகை கத்ரினாகைப்பும் கலக்கலாக நடனமாடி ரசிகர்களை குஷிப்படுத்தினர்.

அதைத் தொடர்ந்து கேரளா பிளாஸ்டர்ஸ் அணியின் கப்டன் சந்தேஷ்ஜின்கான், அட்லெடிகோ டி கொல்கத்தா கப்டன் ஜோர்டி பிக்யூராஸ் மோன்டெல் ஆகியோர் விழா மேடைக்கு அழைக்கப்பட்டனர். கேரளா அணியின் உரிமையாளர்களில் ஒருவரான முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், பிரபல நடிகர் மம்முட்டி ஆகியோரும் மேடைக்கு வருகை தந்தனர்.




இதன் பின்னர் ரசிகர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் கால்பந்தை போட்டி ஒருங்கிணைப்பு குழு சேர்மன் நிதா அம்பானியிடம் மம்முட்டி வழங்க, போட்டி முறைப்படி தொடங்குவதாக அறிவிக்கப்பட்டது.

கலைநிகழ்ச்சிக்கு பிறகு இரவு 8 மணிக்கு அரங்கேறிய முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் அட்லெடிகோ டி கொல்கத்தா அணி, கேரளா பிளாஸ்டர்சுடன் மல்லுகட்டியது. விறுவிறுப்பான இந்த மோதலில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க தீவிர முனைப்பு காட்டினர். பந்து கொல்கத்தா பக்கமே (57 சதவீதம்) சற்று அதிகமாக சுற்றிக்கொண்டிருந்தது.

ஆனால் இரண்டு அணியிலும் கோல் கீப்பர்கள் கச்சிதமாக செயல்பட்டதால் அனைத்து முயற்சிகளும் வீணாயின. குறிப்பாக கொல்கத்தா வீரர் அடித்த ஒரு நல்ல ஷாட்டை, கேரளா கோல் கீப்பர் பால் ராசுப்கா அருமையாக தடுத்து நிறுத்தினார். ஒரு கோலாவது விழாதா? என்று ஏக்கமுடன் காத்திருந்த ரசிகர்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. ஆட்டம் கோல் இன்றி (0-0) சமநிலையில் முடிந்தது. ஐ.எஸ். எஸ். போட்டியின் தொடக்க ஆட்டத்தில் எந்த அணிக்கும் வெற்றி கிடைக்காதது இதுவே முதல் முறையாகும். (க)

# டோனியின் எதிர்காலத்தை தேர்வாளர்களே முடிவு செய்ய வேண்டும்

## கபில் தேவ் தெரிவிப்பு



இந்திய அணியின் விக்கெட் கீப்பராக செயல்பட்டு வரும் மகேந்திர சிங் டோனியின் எதிர்காலத்தை தேர்வாளர்கள் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் என கபில்தேவ் கூறியுள்ளார்.

இந்திய அணியின் சாதனைக் கப்டனாக திகழ்ந்தவர் மகேந்திர சிங் டோனி. டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற இவர், இந்த வருட தொடக்கத்தில் ஒருநாள் மற்றும் இருபது-20 அணி கப்டன் பதவியில் இருந்து விலகி, விக்கெட் கீப்பர் பட்ஸ்மேனாக விளையாடி வருகிறார்.

சமீப காலமாக டோனி ஓய்வு பெற வேண்டும் என்ற விமர்சனம் எழுந்துள்ளது. நியூசிலாந்து இருபது-20 தொடரின்போது. 2-வது போட்டியில் அவர் மோசமாக விளையாடினார். இதனால் டோனி இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற விமர்சனம் கடுமையாக எழும்பியது.

இந்நிலையில், டோனியின் ஓய்வு முடிவை தேர்வாளர்கள் மட்டுமே முடிவு செய்ய வேண்டும் என கபில்தேவ் கூறியுள்ளார்.


டோனியின் ஓய்வு குறித்து கபில்தேவ் கூறுகையில் "எந்த வீரரும் அவருடைய வாழ்நாள் முழுவதும் விளையாட முடியாது.

ஆனால், டோனி சிறப்பாக விளையாடி வருகிறார். அவரது முடிவை தேர்வாளர் களிடம் விட்டுவிடுகிறேன். நாம் என்ன செய்கின்றமோ அதைவிட தேர்வாளர்கள் சிறந்த வேலையை செய்வார்கள்.

நான் ஏதாவது சொன்னால் அது மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

அதைச் செய்ய நான் விரும்பவில்லை. தேர்வாளர் கள் தான் அதை செய்ய வேண்டும்" என்றார். (க)

# இங்கிலீஷ் பிரிமியர் லீக் அர்செனல் அணி வெற்றி



இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்து தொடரில் நார்த் லண்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் டோட்டன் ஹாம் அணியை அர்செனல் வீழ்த்தியது.

இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்து தொடரின் நேற்று ஆட்டம் ஒன்றில் அர்செனல் - டோட்டன் ஹாம் அணிகள் நார்த் லண்டனில் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டம் தொடங்கியது முதலே அர்செனல் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஆட்டத்தின் 36 ஆவது நிமிடத்தில் மெசுட் ஓசில் இடது பக்கம் கார்னர் பகுதியில் இருந்து அடித்து பந்தை. முஸ்டாஃபி தலையால் முட்டி கோல் அடித்தார்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அர்செனல் மேலும் ஒரு கோல் அடித்தது. அலெக்சான்ட்ரே லகாசெட்டே கொடுத்த பந்தை அலெக்சிஸ் சான்செஸ் கோலாக மாற்றினார்.

இதனால் முதல் பாதி நேரத்தில் அர்செனல் 2-0 என முன்னிலைப் பெற்றது.

2 ஆவது பாதி நேரத்தில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்கவில்லை. இதனால் அர்செனல் 2-0 என வெற்றி பெற்றது. (க)

# ஸ்பேஸ் வி.கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டி

## இறுதிப் போட்டியில் வினஸ்



ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் அச்சுவேலி றொக்கட் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது வீனஸ் விளையாட்டுக் கழகம்.

முதலில் துடுப்பெடுத்தாடிய றொக்கட் அணி 8 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 34 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வீனஸ் விளையாட்டுக்கழகம் 6.4 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது. (க)

## இடைக்கால...

தயாராக இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோறளைப்பற்றுத் தெற்குப் பிரதேசக் கிளையின் ஏற்பாட்டில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்லி நிமலன் சௌந்தரநாயகத்தின் 17ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமஷ்டி குறித்து யாரும் பயப்படத் தேவையில்லை. சமஷ்டியை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் சிங்களவர்கள். இதை முதலில் பிரித்தானியர்களுக்கு பரிந்துரை செய்தவர்கள் கண்டிய சிங்களவர்கள்.

இது சிங்கள மக்களுக்கு எதிரானது என எவரும் கூற முடியாது. இந்த விடயங்களை அவர்கள் பயப்படாமல் இருக்கும் வகையில் கூற வேண்டும்.

ஒரு நாட்டின் அரசியலமைப்பு மக்கள் பார்த்து பயப்படும் ஒன்றாக இருக்க கூடாது. சொற்களைக் கண்டு பயந்தால் அந்த சொற்களைத் தள்ளி வைத்துவிட்டு உள்ளடக்கங்களைப் பார்க்க வேண்டும். 70 ஆண்டுகளாக எமது மக்களின் அபிலாசைகளாக இருந்த எங்களை எமது மாநிலத்தில் ஆட்சி செய்கின்ற அதிகாரம் இருக்கிறதா இல்லையா? எனப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய மக்களின் அடிப்படை விடயங்கள் இடைக்கால அறிக்கையில் மறுக்கப்பட்டுள்ளது என எவராலும் கூற முடியாது. நாங்கள் தற்போது அரைவாசி தூரம்தான் வந்துள்ளோம்.

இதுகாலவரை நாங்கள் இழந்த இழப்புகளுக்கு மாற்றீடாக ஒரு அரசியல் தீர்வு கிடைக்க வருகின்ற சந்தர்ப்பத்தை நாங்களே மழுங்கடித்து எங்கள் தலையில் நாங்களே மணணைப் போட வேண்டும் என்று சொல்லுகின்றவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (மு-4)

## யாழ்.குடாநாட்டு...

என்றும், ஊடகங்களில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

புவியியல் நிபுணர்கள் என்று மாத்திரம் அடையாளப்படுத்திக் கொண்டவர்களால், குடாநாட்டின் புவியியல் சூழல் குறித்து, மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அண்மைய மழையின் போது, யாழ். குடாநாட்டில் வெள்ளம் ஏற்பட்டமைக்கு, வடிகாலமைப்புகளில் ஏற்பட்ட அடைப்பே காரணம் என்று, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு இதுபற்றி அவர் கருத்து வெளியிடுகையில், மழைநீர் அந்தப் பகுதியில் தடைப்பட்டமையே வெள்ள நிலைமைக்கு முக்கிய காரணம். அண்மைய மழையினால், கடல்நீரேரியின் நீர்மட்டமோ, அந்தப் பகுதி குளங்களின் நீர் மட்டமோ அதிகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ்ப்பாண செயலக உதவிப் பணிப்பாளர், எஸ்.ரவி, இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் சில பகுதிகளிலும், யாழ்.நகரில் கரையோரப் பகுதிகளிலும் இன்னமும் வெள்ளப் பாதிப்பு உள்ளது. தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் இன்னமும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 100 மி.மீ இற்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வெள்ளம் ஏற்பட்டமைக்கு, இந்தப் பிரதேசத்தில் உள்ள தவறான வடிகாலமைப்பு முறையாகும். வடிகால்களில் குப்பைகளை பொதுமக்கள் வீசியதால், அவை அடைப்பை ஏற்படுத்தியுள்ளன. எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை ஏற்படாமல் தடுப்பதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-4)

## காங்கேசன் கடலில்...

கடற்படையினர் ரோந்து சென்றுகொண்டிருந்த போது நேற்று காங்கேசன் கடற்பரப்பில் மிதந்துவந்த பொதி ஒன்றை சோதனை மேற்கொண்டபோது கஞ்சா காணப்பட்டமை தெரியவந்தது. இதில் 55kg கேரளக்கஞ்சா காணப்பட்டது.

இதனை காங்கேசன்துறைப் பொலிஸில் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் பெறுமதி ஒரு கோடியே பத்து இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. (மு-60)

## இந்திய மீனவர்...

7.15 மணியளவில் இந்திய மீனவர்கள் நால்வர் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் நேற்று முன்தினம் பின்னிரவு 10.50 மணியளவில் மேலும் நான்கு இந்திய தமிழக மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய மீனவர்களின் இரண்டு படகுகளை இலங்கை கடற்படை தன்வசப் படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்களையும் யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். நேற்று இவர்கள் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை இந்திய மீனவர்கள் 10 பேர் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பருத்தித்துறை கடல் எல்லையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

## வாள்வெட்டுக் குழு...

நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில் யாழில் தொடரும் வாள் வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

குறித்த பொலிஸ் குழுக்கள் கடந்த வியாழக்கிழமை முதல் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் நேற்று இரவும் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பாக யாழ்.நகரம், திருநெல்வேலிச் சந்தி, கொக்குவில் சந்தி, கோண்டாவில், உரும்பிராய் உட்பட பல்வேறு பகுதிகளிலும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றமையையும் அவதானிக்க முடிகிறது. (மு-4)

## மின்னல் தாக்கி...

றுள்ளது.

உயிரிழந்த சிறுவனின் உடலம் மருத்துவ பரிசோதனைகளுக்காக மன்னார் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு-துறை நீலாவணைக் கிராமத்தில் நேற்று மின்னல் தாக்கியதில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்தார். இதன்போது உயிரிழந்தவர் 36 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (மு-4)

## காய்ச்சலால்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான சுப்பிரமணியம் இரத்தினேஸ்வரி (வயது 55) என்ற குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 16,17,18ஆம் திகதிகளில் காய்ச்சல் மற்றும் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டிருந்தார். கடந்த 18ஆம் திகதி காலை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

வைத்திய சாலையில் இரத்த பரிசோதனை வசதி இல்லாததால் இரத்தம் பரிசோதிக்கப்படாமல், மாத்திரைகள் கொடுத்து வைத்தியர் அனுப்பியுள்ளார். காய்ச்சல் அதிகரித்தால் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு வரும்படி தெரிவித்துள்ளார்.

ஆனால், அன்று இரவு 11 மணியளவில் உடல் சோர்ந்து, நடக்கமுடியாமல் இருந்த காரணத்தால் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

ஆனால் நேற்று காலை 10 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## பெற்றோல் தட்டுப்பாடு...

நிரப்பு நிலையங்கள் பலவற்றில் வாகன வரிசைகளைக் காணமுடிந்த போதிலும் பெற்றோல் தட்டுப்பாடு ஏதும் கிடையாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து நிரப்பு நிலையங்களிலும் தேவைப்படும் எரிபொருள் காணப்படுகிறது எனவும், எனவே பதற்றத்தில் அதிகளவு எரிபொருளை வாங்கி வைக்க வேண்டிய தேவையில்லை எனவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (மு-4)

## 2 நாட்களில் 41 பேர்...

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் சிறப்பு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாள்வெட்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கு, மூன்று பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலுக்கு அமைய, மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த வாள்வெட்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாகவே அண்மைய கைதுகள் இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (மு-11)

## சர்வேஸின் ஆதங்கம்...

பிரதமந்திரியரசர் சர்வானந்தா அவர்கள் வலிந்துஎன்னை அழைத்தபோதும் நான் பங்குபற்றவில்லை. காரணம் ஆங்கிலேயரிடமிருந்து நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தாலும் சிங்களஆதிக்கத்தில் இருந்துசுதந்திரம் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. சென்ற வருடம் பெப்ரவரி மாதத்தில் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள இரா.சம்பந்தன் முடிவெடுத்தபோது அவருடன் அதில் கலந்து கொள்ள நான் முன்வரவில்லை. எனவேதான் எனது எதிர்ப்பை அவ்வாறு நான் காட்டி வந்துள்ளேன் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மக்கள் அனைவரையும் மதிக்கும் விதத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி வருகின்றேன். தேசிய கீதம் இசைக்கும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்தி வருகின்றேன். இப்பொழுது தேசிய கீதம் தமிழிலேயே வட மாகாணத்தில் பாடப்படுகிறது.

ஆகவே சர்வேஸ்வரனின் ஆதங்கம் ஒரு விதத்தில்வெளிவந்துள்ளது. எனது ஆதங்கம் இன்னொருவிதத்தில் வந்து கொண்டிருக்கின்றது. அவரின் உணர்ச்சிகளை நான் புரிந்துள்ளேன், மதிக்கின்றேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் புறக்கணிப்பது எமது மக்கள் யாவரையும் புறக்கணிப்பது போலாகும். எமது மனவேதனையை அவ்வாறான புறக்கணிப்பால் எடுத்துக் காட்டாமல் விட்டிருக்கலாம் என்பதே என் கருத்து. தேசியக் கொடிபௌத்தத்திற்கும் பேரினத்திற்கும் மிகக் கூடிய முக்கியத்துவம் அளித்து இந்நாட்டின் முதல் குடியான தமிழர்களுக்கும் முதல் மதமான சைவத்திற்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் அந்தப் பிழையை தேசியக் கொடியையோ தேசிய கீதத்தையோ உதாசீனம் செய்து வெளிக்காட்டாது வேறு வழிகளில் காட்டியிருக்கலாம் என்பதே எனது கருத்து.

ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தேசியக் கொடியை எரிப்பதை ஒரு ஜனநாயக உரித்து என்றே பார்க்கின்றார்கள். அதைக் குற்றம் என்று கண்டு அவ்வாறு செய்வோரை சிறைப்படுத்துவதில்லை.

எனவே தனது எதிர்ப்பை இவ்வாறு காட்டாமல் வேறுவழிகளில் எதிர்காலத்தில் காட்டுமாறு சர்வேஸ்வரனிடம் கோரிக்கை விடுவனேதவிர அவருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதே என் கருத்து. தமிழ் மக்களின் மன வேதனையை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில், தேசியக் கொடியை நிராகரித்த வடக்கு மாகாணத்திற்கு அதிகாரங்களை எப்படி வழங்குவது என்று கேட்டுள்ளார். தவறுகளைத் தம்வசம் வைத்துக் கொண்டு இவ்வாறான கேள்விகளை சிங்கள அரசியல்வாதிகள் கேட்கக் கூடாது. அவரின் தவறுகளை அவருக்கு உணர்த்தவேண்டிய கட்டாயம் எனக்குள்ளது.

முதலாவது சிங்கள அரசியல்வாதிகளே எமக்கு அதிகாரங்கள் வழங்க உரித்துடையவர்கள் என்று அப் பாராளுமன்ற உறுப்பினர் நினைப்பது தவறானது. இதுவரை காலமும் அவ்வாறு நடந்துள்ளதானால் சிங்கள அரசியல் தலைவர்கள் ஆங்கிலேயரையும் தமிழ்பேசும் மக்களையும் ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட சலுகைகளை அடாவடித்தனமாகப் பாவித்து வந்தமையே காரணம். பெரும்பான்மை இனத்தவர் என்பதால் மற்றையோரைவேறுபடுத்தி, தம் மக்களுக்குப் பக்கச் சார்பாக நடந்து கொள்ளவேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கவில்லை. சுவிட்சர்லாந்தில் சிறுபான்மையினருக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்குகின்றார்கள். ஆனால் இங்கோ எம்மைப் புறக்கணிக்கின்றார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமது எதிர்ப்பை வன்முறையற்ற முறையில் எடுத்துக்காட்டிய தமிழ்த் தலைவர்களை பேரை ஏரிக்குள் (Beira Lake) தூக்கி எறிந்தமை அடாவடித்தனமே. போர்முடிந்தும் இராணுவத்தை வட கிழக்கு மாகாணங்களில் இன்றும் நிலை பெறச் செய்துள்ளமை அடாவடித்தனமே. செய்வதையுஞ்செய்து விட்டு எம் மீது பிழையைப் போடப் பார்க்கின்றார் உறுப்பினர்.

இரண்டாவதாக அவர் மனதில் இருத்த வேண்டியது எவரும் தமது எதிர்ப்பை அஹிம்சா முறையில் எடுத்துக் காட்டலாம் என்பதை. சிங்களப் பெரும்பான்மையினம் விட்டதவறுகளே எம் எதிர்ப்பை நாம் காட்டவைத்ததேயொழிய எதிர்ப்பைக் காட்டினால் அதிகாரங்கள் வழங்கமாட்டோம் என்றுமிரட்டுவது அவர்களின் அடாவடித்தனத்தின் மற்றொரு வெளிப்பாடு.

மூன்றாவது அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது சட்டரீதியாகவே அல்லாது அடாவடித்தனம் செய்பவரின் அந்தரங்க எண்ணங்களின் அடிப்படையில் அன்று.

நான்காவது போர் முடிந்து எட்டு வருடங்களாகியும் இராணுவத்தினரை வடகிழக்கு மாகாணங்களில் நிலைகொள்ளச் செய்த பின்னரே உறுப்பினர் இவ்வாறு கூறுகின்றார். எப்படியும் தமிழ் மக்களை அடிமைப் படுத்தி வைக்கவேண்டும் என்ற எண்ணப்பாட்டில் இருந்து கொண்டுதான் அவர் அதிகாரம் வழங்குவது எவ்வாறு என்று கேட்கின்றார்.

முதலில் தேசியக் கொடியை நிராகரித்தவரின் மனோநிலையை அவர் புரிந்து கொள்ளட்டும். அவருக்கு அந்த மனோநிலையை வருவித்தவர்கள் குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் உறவின அரசியல்வாதிகளே என்பதை உணர்ந்து கொள்ளட்டும். இறுதியாக அவரோ அவரின் கூட்டமோ எமக்கு அதிகாரங்களை வழங்குவது என்பது அடாவடித்தனத்தின் உச்சவெளிப்பாடு என்பதைஅவர் புரிந்துகொள்ளட்டும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (மு-4)



யாழ்ப்பாணம் மூளாய் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் நகர் மைய ரோட்டறிக் கழகத்தினர் உணவுப்பொருட்கள் வழங்குவதை படத்தில் காணலாம்...

## ஒத்துமாறல்

வவுனியா பாடசாலையில் 3-ம் வகுப்பின் தரம் 1 (அ) ஆம் தரத்தில் உள்ள குடியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 0765790936 (1362)


## தேசியக் கொடியை...

சிங்களப் பாடசாலையில் கடந்த வாரம் வசதி குறைந்த மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு அழைக்கப்பட்டார்.

எனினும், அவர் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்ததால், கல்வி அதிகாரிகள் அதனை ஏற்றியிருந்தனர்.

இதையடுத்து வடக்கு மாகாண கல்வி அமைச்சர், நாட்டின் அரசியலமைப்பை மீறிவிட்டதாகவும், அவர் மீது வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தென்னிலங்கையில் இருந்து குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தேசியக் கொடி பன்மைத்துவத்தை பிரதிபலிக்கவில்லை என்பதால் அதனை ஏற்றுவதில் தனக்கு உடன்பாடு இல்லை என்று வட மாகாண கல்வி அமைச்சர் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தது, அரசியலமைப்பு மீறலா என்பது குறித்து இன்று தாம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரவுள்ளதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (மு-4)


மாதம் 50,000 - 200,000/- வருமானம்தரும் வெளிநாட்டு வேலை & விசா ஏற்பாட்டுடன்

Marriott Sheraton

Swiss - UK - Canada - Australia - New Zealand Dubai - Qatar - Kuwait - KSA - Oman - Bahrain (C-441)

Diploma in Tourism & Hotel Management 10ம் அணி

FAST TRACK (1 - 3 month) Course FEE Rs. 15000/-

FREE ENGLISH, SINHALA & IT அதிநுட்ப விசேட பயிற்சிநெறி

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS

அனுமதிகளுக்கு: 077 36 16 798 021 222 00 11 www.sikaram.lk

175, 1ம் குறுக்குத்தெரு, (வெம்படி வீதி), யாழ்ப்பாணம்



## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571



## விற்பனைக்கு

iphone 4s - Rs 13000 மற்றும் iphone 5, 5s, 6, Used laptops (Dell / Lenovo) i 5 Processor - Rs 26000 விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 0777 172 325 www.iway.lk (C-447)



## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக அமெரிக்காவில் குடியேற அதிஸ்ட வாய்ப்பாக அமையும் லொத்தர் விசா (Green Card)

18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்

திருமணமானவர்களுக்கு இரண்டு வாய்ப்புகள்

இன்னும் 2 நாட்களே, அலட்சியம் வேண்டாம்

யாழ்ப்பாணம் / வேலணை / கிளிநொச்சி

அண்ணா அன் கோ

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி (C-444)

021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

(C-464)

UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



# Chemistry K.Subeesan

## தொடர் பரீட்சை இலக்கம் 02

2019 (A/L) Maths & Bio


| Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|
| Thevarasa Sangaran | V. C. C | 97 | 1 |
| Thiriloganathan Manimohan | J. M. C | 97 | 1 |
| Kandappu Shankavi | J. V. G. H. S | 97 | 1 |
| Nilany Sriskandharajah | J. V. C. C | 90 | 4 |
| Sivaneswaran Sarmilan | J. M. C | 87 | 5 |
| Anpalakan Akimshan | V. C. C | 83 | 6 |
| Sivarasa Sarannija | J. V. G. H. S | 83 | 6 |
| Thavapalaratnam Renujan | J. M. C | 83 | 6 |
| Yogalinkam Kanusan | V. C. C | 80 | 9 |
| Laxsika Sivakumar | J. V. G. H. S | 80 | 9 |
| Puvanenthiran Thevajini | J. V. G. H. S | 77 | 11 |
| Dushara Maniseharan | J. M. C | 77 | 1 |
| Thilaxsana Tharmaseelan | J. H. L. C | 77 | 11 |
| Selvarathnam Raveentheran | J. H. C | 73 | 14 |
| Sivarasan Suren | V. C. C | 70 | 15 |
| Maheswaran Yathurshan | S. P. C | 70 | 15 |
| Pakirathan Piruntthan | J. H. C | 70 | 15 |
| Shanthakumar Kajoora | J. U. C | 70 | 15 |
| Sritharan Kiruthikan | J. M. C | 70 | 15 |
| Sujanthini Kirishnamoorthy | J. M. C | 67 | 20 |
| Nisanthini Kanthakumar | J. M. C | 67 | 20 |
| Kajana Kanagaratnam | J. V. C. C | 67 | 20 |
| Sajanthriny Balasuntharam | J. M. C | 63 | 23 |
| Shanu Pasikaran | J. M. C | 63 | 23 |
| Ajantha Neeklas | J. M. C | 60 | 25 |
| Movitha uruthirakumar | J. M. C | 60 | 25 |
| Vanesasingam Dilshan | J. S. P. C | 60 | 25 |
| Kanthasamy Sujieth | J. M. C | 57 | 28 |
| Sampavi Mahesan | J. M. C | 57 | 28 |
| Herheesa Maheswararaj | J. H. L. C | 57 | 28 |
| T.Edwin Emlinkumar | J. M. C | 53 | 31 |
| Kukenthirarasa Darsan | J. M. C | 53 | 31 |
| Jeyakkumar Shakithyan | J. M. C | 53 | 31 |
| Atputharasa Laxshan | J. M. C | 53 | 31 |
| Kathircamalingam kethusan | J. M. C | 53 | 31 |
| Sarvika Jegarasa | J. M. C | 53 | 31 |


SCIENCE Ocean Nothing is Impossible

ஊரெழு - கொக்குவில்

SCIENCE CORNER

CLOCK TOWER LANE - JAFFNA



## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன. தவறவிடாதீர்கள்.

0768226243

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது ஆகவே இப்போதே முந்துங்கள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள் (C-443)

வே.கமலேந்திரன் -குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள் V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697966



## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் 10.12.2017 யாத்திரிகர் 10 நாட்கள் 16

**தரிசிக்கும் இடங்கள்:** மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மா கோவில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி, லிங்கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குளவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனிமுருகன் உட்பட 60க்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனா பீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை:** இருவழி விமான டிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.

(இத்துடன் யாழ்.கொழும்பு யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)

விசேஷிப்பு : 03.01.2018 அன்று சிதம்பரத்தில் நடைபெறவுள்ள ஆருத்ரா தரிசனத்தை முன்னிட்டு எமது யாத்திரையில் கலந்துகொள்ளும் யாத்திரீகர்களின் பெயர்கள் எழுதப்பட்டு, குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு 1/2 பவுண் சிவன் பென்ரன் ஒன்று பரிசாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம் 10 பேருக்கு மேல் யாத்திரையில் கலந்துகொண்டால் மட்டுமே இந்த அதிர்ஷ்டம் தெரிவு செய்யப்படும்.

மேல்விபரங்களுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன் (C-416)



## பாதீட்டு முன்மொழிவுகளும் பங்குச்சந்தை முதலீடுகளும்

www.cse.lk

(சமகாலப்போக்கு தொடர்பான கலந்துரையாடல்)

Seminar On Budget-2018

திரு.ஸ்ரீரங்கன் அச்சுதன் (Senior Research Analyst) - First Capital Holding PLC

25.11.2017 சனிக்கிழமை 9.00-12.00/ பதிவுக்கட்டணம் Rs. 500.00

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை-147-2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

CSE COLOMBO STOCK EXCHANGE (C-431)

பதிவுகளுக்கு:- 077 782 2014/ 021 222 1455


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.